வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
Email : news@eelanadu.lk
மலர் : 03 13.09.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 278 பக்கங்கள் : 16




# 13ஆம் திருத்த சட்டத்தை இலங்கை முழுமையாக அமுலாக்க வேண்டும்!

## மாகாண சபை தேர்தலை நடத்தவும் ம. உ. பேரவையில் இந்தியா வலியுறுத்து

ஜெனிவா, செப். 13

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் மாகாண சபை தேர்தலை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ள இந்தியா, தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முயற்சியில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றம் எதையும் காட்டவில்லை என்றும் கவலை தெரிவித்துள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் நேற்று உரை

15



வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றவேளை...!

# மனித உரிமைகள் மீறல்களுக்கு இலங்கை பொறுப்புகூற வேண்டும்!

## பதில் ஆணையாளர், உறுப்பு நாடுகள் வலியுறுத்தல்!

- ❒ சர்வதேச விசாரணைக்கும் - தண்டனைக்கும் மீளவும் வலியுறுத்து
- ❒ பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பில் கரிசனை
- ❒ வடக்கு - கிழக்கு இராணுவ பிரசன்னம் தொடர்பில் கவலை
- ❒ நீதித் துறையின் சுயாதீனத்தை வலுப்படுத்த வலியுறுத்து
- ❒ பௌத்தத்தின் பெயரால் காணிகள் ஆக்கிரமிப்பு
- ❒ கருத்துச் சுதந்திரம் தொடர்ந்தும் அடக்குமுறைக்குள்

ஜெனிவா, செப்ரெம்பர் 13

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இலங்கை தவறியுள்ள நிலையில், அந்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களின்கீழ் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும் சர்வதேச சட்டவரம்பின் மூலமான வழிமுறைகளைப் பயன்படுத்தல் மற்றும் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டவர்களுக்கு எதிராக தடைகளை விதித்தல் உள்ளடங்கலாக பொறுப்புக் கூறலை உறுதிசெய்வதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கு உறுப்புநாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

15

# மனித உரிமைகளில் இலங்கை முன்னேற்றம்!

## இப்படி கூறின சீனா, ரஷ்யா

ஜெனிவா, செப். 13

மனித உரிமைகள் விடயத்திலும் நல்லிணக்கத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இலங்கை காண்பித்திருப்பதாக ரஷ்யாவும் சீனாவும் தெரிவித்துள்ளன.

நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள், போர் குற்றங்கள், பொருளாதார குற்றங்கள் தொடர்பில்

15

## கைதிகள் போராட்டத்துக்கு ஆதரவாக

# யாழ்ப்பாணத்தில் உறவுகள் உண்ணாவிரதப் போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 13

தமது விடுதலையை வலியுறுத்தி மகசின் சிறையில் கடந்த 7 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக அவர்களின் உறவினர்கள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

2019, 2020 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 12

15

# தமிழ் தரப்பின் ஒருமித்த முடிவாலேயே ஆணையாளர் உறுதியான அறிக்கை!

## ஜெனிவாவில் ரெலோ கட்சி

ஜெனிவா, செப். 13

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்த வாய்மூல அறிக்கையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைத்த பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ் மக்களின் நீதிக்காகவும் நாம் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து செயல்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வலியுறுத்தியுள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள்

15

# இலங்கை வீழ்ச்சி ஊழலும் காரணம்!

## சமந்தா பவர்

கொழும்பு, செப். 13

அரசியல்வாதிகள் மற்றும் சில உயர்மட்ட அரச அதிகாரிகள் தமது பதவிகளைப் பயன்படுத்தி வீசாக்களை பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் உட்பட பல காரணிகள் இலங்கை

15

# மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை நிராகரிக்கிறோம்

## ஜெனிவாவில் கூறியது இலங்கை

ஜெனிவா, செப். 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம் இலங்கை மக்களின் இறையாண்மையையும் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தையும் மீறும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே இந்தத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் அதனுடன் தொடர்புடையதாக மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்துள்ள பரிந்துரைகளையும் இலங்கை முற்றாக நிராகரிக்கிறது.

- இப்படி ஐக்கிய நாடுகள்

15

# ‘சிங்கள - பௌத்த நாடு’ மனநிலை மாறும்வரை இங்கு பிரச்னை தீராது

## சமந்தா பவரிடம் கூறினார் மனோ எம். பி.

கொழும்பு, செப். 13

“இன்று இந்நாட்டில் ஏற்பட்டிருப்பது பொருளாதாரப் பிரச்னை மட்டுமல்ல. அதையும் மீறிய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி ஆகும். இதற்கு மூல காரணம், இந்த நாட்டில், இன்னமும் தீராமல் இருக்கும், தேசிய இனப்பிரச்னை ஆகும். இதற்குப் பிரதான காரணம், இந்த நாடு சிங்கள - பௌத்த நாடு என்ற நிலைப்பாடு மாறாமல் இருப்பதே.”

- இவ்வாறு அமெரிக்காவின் சர்வ தேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவரிடம் தெரிவித்துள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பி.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் 7 கட்சிகளின் தலை

15

# கைதிகளைப் பார்வையிடச் சென்ற பெண்கள்மீது மோசமான சோதனை!

## செல்வம் எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 13

தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிட சென்ற அவர்களின் உறவினர்களான பெண்களை மிகவும் மோசமாக சோதனை செய்து அவர்களை அசிங்கப்படுத்தியதுடன், இனவாதமாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் நடந்து கொண்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைதிகள் தினத்தை முன்னிட்டு தங்களது உறவுகளை சிறைச்சாலைக

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இனி அரசியலுக்கு வரமாட்டேன் என்று தெரிவித்து வந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, திடீரென்று தனது முடிவை மாற்றியிருக்கிறார் என்று கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது. மீண்டும் அரசியலுக்கு வருவேன் என்று இப்போது அவர் தெரிவித்துள்ளாரென சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில வார காலம் வெளிநாடுகளில் இருந்துவிட்டு நாடு திரும்பிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை அவரின் வீடு தேடிச் சென்று சந்தித்ததுடன் அவரிடம் நலம் விசாரித்தும் வந்தனர். இவ்வாறு அவரிடம் சென்றவர்கள் எல்லோருமே அவரிடம் முன்வைத்த முக்கியமான கேள்வி, மீண்டும் அரசியலுக்கு வருவீர்களா, பிரதமர் பதவியை ஏற்பீர்களா என்பதுதான்.

அப்போதெல்லாம், தான் அரசியலுக்கு வரமாட்டேன் என்றே அவர் அனைவரிடமும் தெரிவித்து வந்தார்.

ஏற்கனவே, தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகவும், வியத்மக பிரதிநிதியாக கருதப்பட்ட கோட்டாவுக்கு நெருக்கமானவராகவும் இருந்த திருமதி சீதா அரம்பேபொல, தனது தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை கோட்டாவுக்கு வழங்கத் தயார் என்றும் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

எனினும், கடந்த வாரம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தன்னைப் பார்க்க வந்த அனைவருக்கும் கோட்டா இந்த பதிலை அளித்திருந்தாலும் கடந்த செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் சந்திப்பவர்களிடம் அவரின் பதில் மாற்றமடைந்திருப்பதாக அந்த சிங்கள வார ஏடு தெரிவித்திருக்கின்றது.

கடந்த வாரம் செவ்வாய்கிழமை இரவு இடம்பெற்ற சிறப்பு நிகழ்வொன்றே இதற்கு காரணமாம். அன்றைய தினம், கோட்டாவை ஆட்சிக்குக் கொண்டு வர பெரும் பங்களிப்பைச் செய்த இரண்டு சக்தி வாய்ந்த பிரமுகர்கள் (அரசியல்வாதிகள் அல்லர்) கோட்டாவை சந்திக்க மலல சேகர மாவத்தையில் உள்ள அதிகாரபூர்வ இல்லத்துக்கு சென்றிருந்தனர்.

இந்த இருவரும் கோட்டாபயவுமாக மூவருக்கும் இடையே பல மணிநேரம் அதிகாரபூர்வ இல்லத்தின் ஓர் அறையில் நீண்ட உரையாடல் நடந்ததாக அந்த வார ஏடு அறிந்து கொண்டதாக எழுதியிருக்கின்றது.

இந்தச் சந்திப்பின் அடிப்படையில் கோட்டாவின் எதிர்கால அரசியல் போக்கு குறித்து மீண்டும் சில அடித்தளங்கள் போடப்பட்டுள்ளன எனவும், அதற்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன என்றும் அந்த சிங்கள வார ஏடு எழுதியிருக்கின்றது.

எவ்வாறாயினும், இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கோட்டாவை சந்திக்கச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும்போது, கோட்டாவிடம் இருந்து சற்று வித்தியாசமான பதில் கிடைத்திருக்கிறதாம்.

அதாவது, 'இனி அரசியலுக்கு வரமாட்டேன்...' என்று தொடக்கத்தில் தெரிவித்து வந்த கோட்டா, செவ்வாய்க்கிழமை சந்திப்புக்குப் பின்னர், தன்னைப் பார்க்க வந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம், 'அரசியலுக்கு வருவதற்கு நேரமாகிவிட்டது. எனவே சரியான நேரத்துக்காக காத்திருப்போம். அந்த நேரம் வரும்போது வேலையை செய்வோம்...' என்று பதில் கூறத் தொடங்கியிருக்கிறாராம்.

அந்த சிங்கள வார ஏட்டில் இந்தச் செய்தியை படித்த போது, சில மாதங்களுக்கு முன்னர், நமது சுமந்திரன் எம். பி. தெரிவித்திருந்த செய்தி ஒன்று ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

மட்டக்களப்பில் வைத்து அந்த மாவட்ட கூட்டமைப்பு எம். பி. சாணக்கியவையும் மேடையில் வைத்துக்கொண்டே சுமந்திரன் ஒரு தகவலை தெரிவித்திருந்தார்.

அதாவது, சாணக்கியவுக்கு இப்போதும் மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு இருப்பதாகவும், அவர் சாணக்கியவுக்கு சொன்ன ஓர் இரகசிய தகவலையும் அவர் அந்த மேடையில் தெரிவித்திருந்தார்.

'நாட்டில் நிலைமைகள் மோசமடைந்திருப்பதால் நாங்கள் ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவிடம் கொடுத்திருக்கிறோம். நிலைமைகள் அமைதியடைந்ததும், சந்தர்ப்பம் வரும்போது ரணில் ஆட்சியை எங்களிடம் கையளிப்பார்.'

இதுவே மகிந்த ராஜபக்ஷ தரப்பினர், சாணக்கியவுக்கு சொல்லியிருந்த முக்கியமான செய்தி.

இத்தனை முக்கியமான செய்தியை அவர் சாணக்கியவுக்கு சொல்லியிருக்கிறார் என்றால் அவர்கள் இருவருக்குமிடையே எத்தகைய உறவு இருக்கவேண்டும் என்ற கேள்வியை அப்போது இந்தப் பத்தியில் எழுப்பியிருந்ததையும் வாசககர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

சாணக்கியவுக்கு மகிந்தர் சொன்னது உண்மைதானோ என்றே மேற்படி செய்திகளை படித்தபோது ஏற்பட்டது.!

- ஊர்க்குருவி

# தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாடு ஒழுங்குமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13

தியாக தீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவேந்தலை நல்லூரில் அமைந்துள்ள அவரின் நினைவிடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைக்காக 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 15-09-1987 தொடக்கம் 26.09.1987 வரை 12 நாட்கள் உணவு, நீர் இன்றி போராட்டம் நடத்தை ஈகைச் சாவைத் தழுவிக் கொண்டார்.

இந்நிலையில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னெடுப்பது குறித்து நினைவேந்தல் குழு சில தீர்மானங்களை எடுத்துஅறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் நாளை மறுதினம் - 15 ஆம் திகதி வியாழக்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு 26 ஆம் திகதி திங்கட்கிழமை வரையான 12 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

15 ஆம் திகதி வியாழக்கிழமை நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். தியாக தீபம் திலீபன் உண்ணாவிரத மேடையில் அமர்ந்த நேரமாகிய காலை 9.45 க்கு திலீபனின் திருவுருவப்படம் மாவீரர் பண்டிதரின் தாயாரால் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும். இதில் முதன்மை சுடரை பண்டிதரின் தாயார் ஏற்றிவைப்பார்.

தினமும் காலை 9.00 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும். நினைவேந்தல் நிகழ்வுகளின்போது ஒவ்வொரு நாளும் முதன்மைச் சுடரை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைப்பதற்கு ஏற்றவகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகளை அடுத்து இரத்த தான நிகழ்வு நடைபெறும்.

தியாக தீபன் திலீபன் ஈகைச் சாவை தழுவிய நாளான 26ஆம் திகதி திங்கட்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

(ஐ)

# கட்டாய ஓய்வு பெறும் வயதெல்லை; யாழ். அரச அதிபர் விசேட அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13

அரச உத்தியோகத்தர்கள் கட்டாய ஓய்வு பெறும் வயது எல்லையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது,

"2022.01.06 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 20/2022 இற்கமைவாக அனைத்து அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறுகின்ற வயது சில விசேட தேவைகளின் அவசியத்தை அடிப்படையாக கொண்டு 65 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது. கட்டாய ஓய்வு பெறுகின்ற வயதானது ஓய்வூதிய சட்டவிதிகளின் படி 60 வருடங்களாகும்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்துக்கு அமைவாக கட்டாய ஓய்வு பெறுகின்ற வயது 60 வருடங்களாக திருத்தியமைத்து அனைத்து அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதை கட்டாய ஓய்வு பெறுவதற்கு முன்னர் திருத்தியமைக்கும் வகையில் அமைச்சரவையின் அனுமதியுடன் அதற்கான சுற்றறிக்கை அறிவித்தல்கள் வெளியிடப்படும் என தயவுடன் தெரிவிக்கின்றேன்." என குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக வடமராட்சியில் கையெழுத்துகள்!

வடமராட்சி, செப். 13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்று மூன்றாவது நாளாக வடமராட்சியில் இந்த ஊர்திவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கை வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சியில் வல்லை முனியப்பர் கோயில் முன்பாக



தேங்காய் உடைத்து ஊர்தி வழிக் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஊர்திவழிப் போராட்டத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ- 2)

# பூசணிக்காயை திருடி விற்றவர் கைதானார்!

யாழ்ப்பாணம், செப். 13

வட்டுக்கோட்டை பகுதியில் பூசணிக்காயை திருடி விற்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் 40 கிலோகிராம் பூசணிக்காய் களவாடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தோட்ட உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை , வட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள மூளாய் பகுதியில் நபரொருவர் 40 கிலோகிராம் பூசணிக்காயை ஒரு கிலோ 70 ரூபாய் வீதம் விற்பனை செய்தாரெனக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பூசணிக்காயை விற்ற நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

Eelanadu
13.09.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆவணி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொதுஜன பெரமுனவின் கொள்கையும் ரணிலும்

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் ஆரம்பித்துள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பலவீனமாக இருப்பதாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் உதவி ஆணையாளர் அறிவித்திருக்கின்றார். இந்த அறிவிப்புக்கு மத்தியில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, 46/1 தீர்மானத்தை அரசாங்கம் நிராகரிப்பதாக அறிவித்திருக்கின்றார். அது இலங்கையின் இறைமையை மீறுகின்றது என்னும் மொட்டு - பீரிஸின் பழைய வாதத்தை அப்படியே அலி சப்ரி ஒப்புவித்திருக்கின்றார். இலங்கையின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி பிரித்தானியாவால் கடந்த வருடம் கொண்டுவரப்பட்ட 46ஃ1 தீர்மானத்தை கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் நிராகரித்திருந்தது.

தற்போது கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைப்பாட்டையே ரணில் தலைமையிலான அரசாங்கமும் அறிவித்திருக்கின்றது. உண்மையில் இது ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை நிலைப்பாடாக இருக்க முடியாது. ஏனெனில், கடந்த ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பயணிக்கும் கொள்கை நிலைப்பாட்டை எடுத்திருந்தார். அவ்வாறான நிலைப்பாட்டை எடுத்திருந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க முடியாது.

அலி சப்ரியின் அறிவிப்பிலிருந்து ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் பலவீனமாக இருப்பதால் அவர் விரும்பினால்கூட பல்வேறு விடயங்களை முன்னெடுக்க முடியாத நிலைமையிருக்கின்றது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிர்வாகியான சமந்தா பவருடனான சந்திப்பின்போது தெரிவித்திருந்த கருத்துக்களுக்கும் அலி சப்ரி தற்போது அறிவித்திருக்கும் நிலைப்பாட்டுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு.

சமந்தா பவருடனான சந்திப்பின்போது பல முன்னேற்றகரமான விடயங்கள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். ஆனால், அவற்றை அவர் முன்னெடுக்க வேண்டுமாயின் இன்னொரு முறை அதிகாரத்தில் இருக்க வேண்டும். 2005 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும்போதும் ரணிலிடம் நீண்ட கால நோக்கிலான பரந்த பொருளாதார திட்டமிருந்தது. 2003 தொடக்கம் 2006 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக இருந்த ஜெப்ரி லுன்ஸ்டட் தனது ஆய்வறிக்கை ஒன்றில் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு அனுசரணையாளராக இருந்த நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இதனை குறிப்பிட்டிருக்கின்றார். ஆனாலும் மக்களின் ஆதரவின்மையால் ரணில் விக்கிரமசிங்கவால் அவரின் திட்டங்கள் எவற்றையுமே நடைமுறைப்படுத்த முடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் பொருளாதார நெருக்கடியின் விளைவாக தற்செயலாக அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ரணில் பல்வேறு முன்னேற்றகரமான திட்டங்கள் தொடர்பில் பேசினாலும் கூட அவற்றை நடைமுறைப்படுத்த அவர் அதிகாரத்தில் இருக்க வேண்டும்.

இந்த நிலைமையை உற்று நோக்கும் போது எழும் கேள்வி - பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு ரணிலின் திட்டங்கள் அனைத்தையும் முன்னெடுக்க முடியுமா? நிச்சயம் முடியாது. ரணிலின் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமாயின் அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக வரவேண்டும். அதேவேளை பாராளுமன்றமும் அவரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறானதொரு நிலைமை உருவாகாதுவிட்டால் ரணிலால் நிச்சயம் முன்னேற்றங்களை நிரூபிக்க முடியாது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் தொடர்பில் அலி சப்ரியின் அறிவிப்பே இதற்கு சிறந்த உதாரணமாகும். ரணிலின் கொள்கை நிலைப்பாட்டுக்கும் அவர் தலைமை தாங்கும் பாராளுமன்றத்தின் கொள்கை நிலைப்பாட்டுக்கும் இடையில் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு. இதுதான் தற்போதுள்ள அடிப்படையான பிரச்னை.

# 31 ஆயிரம் ஆண்டுகளின் முன்பே உறுப்பு நீக்க சத்திர சிகிச்சை

**விக்ரோறியா கில்**

*31 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மண்ணில் புதைக்கப்பட்ட இளைஞர் ஒருவரின் உடலை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த இளைஞரின் உடலில் சத்திர சிகிச்சை மூலம் கால் துண்டிக்கப்பட்டதற்கான ஆதா ரங்கள் கிடைத்துள்ளன. இது மிகவும் சிக்க லான சத்திர சிகிச்சையின் தோற்றம் ஏற்கெனவே கருதியிருந்ததைவிட 24 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை நமக்கு தெரிவிப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரி வித்துள்ளனர்.*



*இந்த சிக்கலான சத்திர சிகிச்சைக்கு பின்னர் அந்த இளைஞர், பல ஆண்டுகள் உயிருடன் இருந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*இளைஞர் உடலை பரிசோதனை செய்து பார்த்த மருத்துவர் மெலண்ட்ரி வோல்க், மிகத் துல்லியமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*இந்தோனேசியாவில் போர்னியோவின் கிழக்கு கலிமந்தனில் உள்ள லியாங் டெபோ உள்ள குகையில் இந்த கல்லறை தோண்டப்பட்டுள்ளது. இந்த குகையில் உலகின் பழங்கால பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன.*

*ஆராய்ச்சியில் ஈடுபட்ட மூன்று ஆராய்ச்சியாளர்களின் ஒருவரான, அவுஸ்திரேலியாவின் கிரிபித் பல்கலைக்க்கழகத்தை சேர்ந்த டாக்டர் டிம் மலோனி பழங்கால எலும்புகளை ஆராய்ச்சி செய்வது உற்சாகத்தையும் அச்சத்தையும் ஒரேநேரத்தில் தருவதாகக் கூறினார்.*

*பழங்கால இளைஞரின் உடல் பற்றி ‘நேச்சர்’ இதழ் வெளியிட்டுள்ள விரிவான ஆய்வுக் கட்டுரையில், இந்த சத்திர சிகிச்சை இளைஞர் குழந்தையாக இருந்த பொது நடந்ததாக தெரிவித்துள்ளது. சத்திர சிகிச்சைக்கு பின் ஆறு முதல் ஒன்பது ஆண்டுகள் வரை அந்த இளைஞர் உயிருடன் இருந்திருக்கலாம் என்றும், பின்னர் பதின்ம அல்லது இருபது வயதில் அவர் இறந்து இருக்கலாம் என்றும் அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*“நாங்கள் மிகவும் கவனமாக இந்த படிமங்களை ஆராய்ச்சி செய்தோம். அப்போது இளைஞரின் இடது கால் எலும்புகள் காணாமல்போய் இருப்பதை காண முடிந்தது. மீதமுள்ள எலும்புகளின் எச்சங்களை ஆராய்ச்சி செய்தோம். அவை அனைத்தும் மிகவும் அசாதாரணமானவை” என்று பி. பி. சி. செய்தியாளரிடம் டாக்டர் டிம் மலோனி தெரிவித்தார்.*

*“சத்திர சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு மருத்துவ முறைகளின் சாத்தியக்கூறுகள் குறித்து இந்த ஆராய்ச்சி ஏற்படுத்திய உற்சாகத்தில் நாங்கள் உள்ளோம் - சிட்னி பல்கலைக்கழகத்தை சேர்ந்த டாக்டர் வோல்க்கிடம், இந்த பகுதியிலுள்ள எலும்புகளின் எச்சங்களை ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொண்டது.*

*இதுகுறித்துப் பேசிய அவர் “இது மகிழ்ச்சியும், சோகமும் நிறைந்தது. ஏனென்றால், இது ஒரு மனிதருக்கு நேர்ந்திருக்கிறது.” என்றார்.*

*“31 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய எலும்புகள் இவை. இளைஞர் குழந்தையாக இருந்தபோது சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அப்போது அந்த இளைஞர் எவ்வளவு வேதனையை அனுபவித்து இருப்பார் என்பதை உணர முடிகிறது”*

*இது மதச் சடங்கு அல்லது பலி கொடுப்பது ஆகியவையாக இருக்க வாய்ப்பில்லை என்று கூறிய டாக்டர் மலோனி, இது ஒரு சத்திரச் சிகிச்சை என்று தொல்லியல் ஆய்வாளர் நம்புவதாகத் தெரிவித்தார். “காயத்தில் இருந்து மீட்கப்பட்ட மனிதன் வாழ்நாள் முழுவதும் அக்கறையுடன் பராமரிக்கப்பட்டதை பார்க்க முடிகிறது” என்றார் அவர்.*

*டர்காம் பல்கலைக்கழக தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் சார்லோட் ராபர்ட்சன் எலும்புகளை ஆய்வு செய்தார். பின்னர் பேசிய அவர், மருத்துவமும், சத்திர சிகிச்சையும் மிக தாமதமாக வந்தது என்ற கருத்துக்கு இந்தக் கண்டுபிடிப்பு சவால் விடுவதாகத் தெரிவித்தார்.*

*நமது முன்னோர்களை நாம் குறைவாக மதிப்பிட முடியாது என்று கூறிய சார்லோட் ராபர்ட்சன், உடல் உறுப்புகளை வெட்டி சத்திர சிகிச்சை செய்ய மனித உடற்கூறியல், சத்திர சிகிச்சை, போதிய தொழில்நுட்பம் மற்றும் விரிவான அறிவு, சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை மிகவும் அவசியம் என்று தெரிவித்தார்.*

*“தற்போது உறுப்பு நீக்கும் சத்திரச் சிகிச்சை மிகவும் பாதுகாப்பானது. சத்திர சிகிச்சை செய்யும்போது மயக்க மருந்து தரப்படுகிறது, கிருமிநீக்கப்பட்ட சூழல் இருக்கிறது. ரத்தப்போக்கையும், வலியையும் கட்டுப்படுத்தும் வசதி இருக்கிறது. ஆனால் 31 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எந்த வசதியும் இல்லாமல் இந்த சிக்கலான சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது” என்று பேராசிரியர் சார்லோட் றொபர்ட்சன் குறிப்பிட்டார்.*

*இந்த சத்திர சிகிச்சைக்கு எந்த வகையான கற்கருவிகள் பயன்படுத்தப்பட்டன என்பது பற்றி மலோனியும் அவரின் சகாக்களும் ஆய்வு செய்து வருகின்றனர்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
அடிப்படை வசதிகளை அதிகரிக்கும். அரசு வழியிலான முயற்சியில் போராடுவீர்கள். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். அலுவலகத்தில் கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும்.

**இடபம்**
நிதிநிலை உயரும். வீட்டில் சுப நிகழ்சிக்குரிய பேச்சு முடிவிற்கு வரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். புதிய பொருட்களின் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட தடை சரி செய்வீர்கள். உங்கள் முயற்சியில் முன்னேற்றம் உண்டு.நண்பர்களின் உதவியுடன் உங்கள் முயற்சிகள் பலிதாகும். நல்ல எண்ணம் பலிக்கும்.

**கடகம்**
நினைத்ததை சாதிப்பீர்கள்.தொழிலில் கூடுதல் லாபம் உண்டாகும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் குறித்து தகவல் தெரியவரும். குடும்பத்தில் சுபச்செலவு ஏற்படும்.

**சிம்மம்**
பொறுமை தேவைப்படும் நாள்.உங்கள் முயற்சிகளில் தடை ஏற்படும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். தொழிலில் உங்கள் எதிர்பார்ப்பு தடைக்கு பின் நிறைவேறும். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

**கன்னி**
உங்கள் எண்ணம் நிறைவேறும். பெரியோர்களில் அறிவுரையால் நிம்மதி அடைவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். தொழிலில் இருந்து வந்த பிரச்னை விலகும்.

**துலாம்**
உங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொள்வீர்கள். வெளிவட்டாரத்தில் நினைத்ததை சாதிப்பீர்கள். வேலை வாய்ப்பு குறித்த சிந்தனை மேலோங்கும். குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரிடம் செல்வாக்கு உயரும். எண்ணங்கள் நிறைவேறும்.நீங்கள் ஈடுபடும் முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமையை கண்டு அதிகாரி பாராட்டுவார்.

**தனுசு**
உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டாகும்.உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.எதிர்கால நலன் கருதி புதிய முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**மகரம்**
எதிர்பார்த்த செயலில் லாபம் காண்பீர்கள். உத்தியோகத்தில் இருந்த சங்கடம் விலகும். புதிய பொறுப்பு, பதவி உங்களைத் தேடி வரும். வெளிவட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**கும்பம்**
திட்டமிட்டு செயல்படுவீர்கள்.நண்பர்களால் உங்கள் எண்ணம் பூர்த்தியாகும். எதிர்பார்த்த பண வரவு மகிழ்ச்சி அதிகரிக்கும்.உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். தடைபட்ட செயல்கள் இனிதே நடந்தேறும்.

**மீனம்**
நீங்கள் விரும்பியவற்றை அடைவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். வீட்டில் சுப நிகழ்ச்சி நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்வீர்கள்.வியாபாரத்தை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள்.

# ‘மாமனிதன் வைகோ’ ஆவணப்படத்தை வெளியிட்டு வைத்தார் முதலமைச்சர்!




சென்னை, செப். 13

‘மாமனிதன் வைகோ’ ஆவணப்படத்தை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டு வைத்ததுடன், அவரின் 56 வருட அரசியல் பயணத்தையும் பாராட்டிப் பேசினார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (ம. தி. மு. க.) பொதுச்செயலாளர் வைகோவின் அரசியல் பயணத்தை விரிவாக விளக்கும் வகையில் கட்சியின் தலைமை நிலைய செயலாளர் துரை வைகோ தயாரித்து, இயக்கிய “மாமனிதன் வைகோ” என்ற ஆவணப்படம் வெளியீட்டு விழா சென்னை ராயப்பேட்டையில் உள்ள திரையரங்கு ஒன்றில் நடைபெற்றது.

விழாவுக்கு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி தலைமை தாங்கினார். கவிஞர் வைரமுத்து முன்னிலை வகித்தார். விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆவணப்படத்தை வெளியிட்டார். அதைத்தொடர்ந்து ஆவணப்படம் திரையிடப்பட்டது.

ஒரு மணி நேரம் 20 நிமிடங்கள் ஒலிபரப்பானது. இலட்சியம், தியாகம் இதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- இந்த விழா நடைபெறும் சத்யம் தியேட்டரில் திரைப்படத்தில் நடிக்கக்கூடிய கதாநாயகர்களை பார்த்திருக்கிறோம். “நிஜ நாயகர்“ என்றால் வைகோதான். அவர் உயரத்தில் மட்டும் உயர்ந்தவர் அல்ல, கொள்கையிலும், இலட்சியத்திலும், தியாகத்திலும் உயர்ந்திருக்கக்கூடியவர்.

வைகோ பங்கேற்கும் கூட்டம் சென்னை மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதியில் எங்கு நடந்தாலும், சைக்கிளில் அல்லது ஸ்கூட்டரில் போய் கூட்டத்தோடு கூட்டமாக இருந்து கேட்டு ரசித்தவன் நான் என்று முதலமைச்சர் கூறினார். (ஐ)

# எம். ஜி. ஆர். ஜெயலலிதா சிலைகளுக்கு சசிகலா மாலை அணிவிக்கக்கூடாது!

## அ. தி. மு. கவினர் பரபரப்பு முறைப்பாடு

சென்னை, செப். 13

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா சிலைகளுக்கு சசிகலா மாலை அணிவிக்க அனுமதிக்க கூடாது என்று வலியுறுத்தி அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் ஆத்தூர் தொகுதிக்கு செல்லவுள்ள சசிகலா எம். ஜி. ஆர். சிலைகளுக்கும், தலைவாசல் என்ற இடத்தில் எம். ஜி. ஆர். ஜெயலலிதா சிலைகளுக்கும் மாலை அணிவிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், அந்தப் பகுதியின் அ. தி. மு. க. கட்சியினர் ஆத்தூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளனர்.

அதில், ஆத்தூர், தலைவாசல், நரசிங்கபுரம் ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள எம். ஜி. ஆர். மற்றும் ஜெயலலிதா சிலைகள் அ. தி. மு. க. சார்பில் எங்கள் சொந்த செலவில் வைக்கப்பட்ட சிலைகளாகும்.

அந்த சிலைகளுக்கு கட்சிக்கு சம்பந்தம் இல்லாத சசிகலா மாலை அணிவிக்க வுள்ளார் என்று தெரிகிறது. அப்படி அதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

அவர் மாலை அணிவித்தால் சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்படும். எனவே இந்த தகவல் அ. தி. மு. கவினர் இடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. அதனால் அ. தி. மு. கவுக்கு சம்பந்தமில்லாத சசிகலா சிலைகளுக்கு மாலை அணிவித்து கொடியேற்றுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இந்த முறைப்பாடு அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# நிகழும் கொடூரங்களை தடுக்க மது விலக்கை அமுலாக்குங்கள்

## பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை



சென்னை, செப். 13

தமிழ்நாடு முழுவதும் உள்ள மதுக்கடைகளை உடனடியாக மூடி, மதுவிலக்கை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் என அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தனது ருற்றர் பக்கத்தில் , காஞ்சிபுரத்தில் மது போதையில் தாயை தாக்க முயன்ற போது, தடுக்க வந்த அண்ணனை தம்பி கத்தியால் குத்தி கொடூரமாக படுகொலை செய்திருக்கிறான். மது மனிதனை மிருகமாக்கும் என்பதற்கு இதை விட வேதனையான எடுத்துக்காட்டு எதுவும் இருக்க முடியாது. கொலை செய்த தம்பிக்கு 17 வயதுதான். அவரின் தாய், தந்தையர் இருவரும் ஆசிரியர்கள். 12-ஆம் வகுப்பு பயிலும் அவர் நன்றாக படிக்கக் கூடியவர்தான். ஆனால், இத்தனை நல்ல விஷயங்களையும் சிதைத்து அந்த சிறுவனை கொலைகாரனாக்கியிருக்கிறது மதுபோதை. அப்படியானால் அது எவ்வளவு கொடியது?

மனிதன் இயல்பான நிலையில் தாயை தாக்க முனைய மாட்டான். அண்ணனை கொலை செய்ய முயலமாட்டான். ஆனால், பதின்ம வயதை தாண்டாத சிறுவன் இத்தகைய கொடூரங்களை நிகழ்த்தியிருப்பதற்கு காரணம் அவனை இயக்கிய மது அரக்கன்தான். அந்த சிறுவன் கஞ்சாவுக்கும் அடிமை எனக் கூறப்படுகிறது.

இது போன்ற கொடிய நிகழ்வுகள் வாரம் ஒன்று நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இதற்கான தீர்வு என்ன? என்பது அரசாங்கத்துக்கும் தெரியும். எனவே, இனியும் தாமதிக்காமல் தமிழ்நாடு முழுவதும் உள்ள மதுக்கடைகளை உடனடியாக மூடி, மதுவிலக்கை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு



# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கவேண்டும்

## விமல் வீரவன்ஸ கோரிக்கை

கொழும்பு, செப். 13

2022 டிசெம்பர் 05 ஆம் திகதி நடைபெற இருக்கும் உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், 2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஓகஸ்ட் 28 இல் வெளியிடப்பட்டதிலிருந்து, இரண்டாவது மற்றும் மூன்றாவது தடவைக்குத் தோற்றும் மாணவர்கள் அதற்குத் தயாராவதற்கு சுமார் மூன்று மாதங்களே அவகாசம் உள்ளது.



இதன்படி, 2022 டிசெம்பர் 05 ஆம் திகதி முதல் உயர்தர பரீட்சை நடத்தும் தீர்மானத்தை மாற்றியமைத்து, பரீட்சைக்குத் தயாராக மாணவர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்படவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஸ்கான் அறைக்குள்ளே வைத்து 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்

## மருத்துவர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 13

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் 15 வயது சிறுமியொருவரை ஸ்கான் அறையில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டதாக குறித்த சிறுமி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, ஆரம்ப சிகிச்சையின் பின்னர் ஸ்கான் பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பரிசோதனைக்குச் சென்ற சிறுமியை மருத்துவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

நோயாளர் அறைக்கு அழைத்து வரப்பட்டபோது அழுதுகொண்டிருந்த சிறுமியிடம் தாதி விசாரித்தபோது, ஸ்கான் அறையில் தனக்கு ஏற்பட்ட விபரீதத்தை வெளிப்படுத்தினார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நோயாளர் அறைக்கு பொறுப்பான வைத்தியர் வழங்கிய தகவலின் பேரில் வைத்தியசாலை பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், கராப்பிட்டிய மருத்துவ பீடத்தின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஜானகி வருஷஹென்னடி நோயாளியை பரிசோதித்து, சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்று அறிவித்தார்.

எனினும், நோயாளியின் முறைப்பாட்டை புறக்கணிக்க முடியாது என்பதால் காலி பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் பொறுப்பதிகாரி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார். (அ)

# ஏற்றுமதி நோக்கில் வாழைச் செய்கை!

கொழும்பு, செப். 13

“வாழைச் செய்கையை ஏற்றுமதி செய்யும் நிலைமைக்கு” என்ற அபிவிருத்தி வேலைத்திட்டதின் கீழ் வருடாந்தம் 52 ஆயிரம் கிலோகிராம் புளிவாழையை உற்பத்தி செய்ய முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதிக்காக பொதுவான வேலைத்திட்டம் ஒன்று வடிவமைக் கப்பட்டுள்ளதுடன், அவற்றில் ஒரு மெற்றிக்தொன் புளிவாழையை, 600 முதல் 700 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்ய முடியும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின், முதல் 6 மாத காலப்பகுதியில், 28 ஆயிரம் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் ஏற்றுமதியின் மூலம் வாழை செய்கை தொடர்பான முறையான வேலைத்திட்டம் மாவட்டமட்டத்தில் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் கூறினார். (அ)

# நாட்டில் இரண்டு வாரங்களில் மருந்து தட்டுப்பாடு ஏற்படும்!

## அரச மருந்தாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப்.13

**நாடளாவிய ரீதியில் எதிர்வரும் இரண்டு வாரங்களில் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என அரச மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் பி திலகரத்ன தெரிவித்துள்ளார்.**

புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள், இதயம், வலிப்பு, நீரிழிவு நோய், நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு தற்போது கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

புற்றுநோயாளிகளுக்கு தற்போது எட்டு முதன்மை வகை மருந்துகள் பயன்படுத்தப்படவில்லை. கருப்பை, வாய்ப் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய் மற்றும் இரத்த புற்றுநோய்க்கான சிகிச்சை பயனற்றதாக உள்ளது.

தற்போது சுகாதார அமைச்சு இந்திய கடன் உதவி முறையின் மூலம் மருந்துகளை கொள்வனவு செய்வதாகவும், அந்த மருந்துகளை கொள்வனவு செய்வதில் பெரும் தாமதம் ஏற்படுவதாகவும் அரசாங்க மருந்தாளர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சிடம் முறையான பணி உத்தரவு இல்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, வலிப்பு போன்ற நோயாளர்களின் நிலைமைகள் மோசமடைந்து வருவதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும் மருந்து தட்டுப்பாடு காரணமாக நோயாளிகள் எதிர்காலத்தில் கடுமையாக நோய்வாய்ப்படலாம் எனவும் அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் பி திலகரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த, மருந்து தட்டுப்பாடு இல்லை எனவும், கடந்த காலங்களில் எரிபொருள் பற்றாக்குறையால் மருந்துகளைக் கொண்டு செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் விநியோகிக்கப்படும் எனவும் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மே 09 வன்முறைகளைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை!

## முன்னாள் தளபதிகள் குழு ஜனாதிபதிக்கு அறிக்கை

கொழும்பு, செப். 13

நாடெங்கும் கடந்த மே 9 ஆம் திகதி பதிவான வன்முறை சம்பவங்களை தடுப்பதற்கு முப்படையினரும் பொலிஸாரும் போதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, அன்றைய தினம் தாக்கி தீ வைக்கப்பட்ட 74 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களின் வீடுகள் மீது, அவ்வாறான சம்பவங்கள் அரங்கேறப்போவதாக உளவுத் துறையினர் தகவல் அளித்தும் அதனை தடுக்கப் பொலிஸாரும், முப்படையினரும் தவறினர் என்று தெரியவந்துள்ளது.

கீழ் நிலை பொலிஸ், முப்படையின் உறுப்பினர்களுக்கு மேல் நிலை அதிகாரிகள் உரிய கட்டளைகளை உரிய நேரத்தில் வழங்கவில்லை என இதன்போது தெரியவந்துள்ளது.

மார்ச் 31 ஆம் திகதியில் இருந்து மே 9 ஆம் திகதி வரை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னாள் படைத் தளபதிகள் மூவர் அடங்கிய குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் விசாரணை ஊடாக மேற்படி விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குறித்த குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடைக்கால சுருக்க அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

கடற்படையின் முன்னாள் தளபதி அட் மிரல் ஒவ் த ப்ளீட் வசந்த கரன்னாகொட இந்த விசாரணை குழுவுக்கு தலைமை தாங்கிய நிலையில் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க மற்றும் விமானப்படையின் முன்னாள் தளபதி மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். இந்தக் குழு கடந்த மே 24ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு கடந்த ஏப்ரல் 31 மிரிஹானை சம்பவம் மற்றும் மே 9 நாடளாவிய ரீதியிலான வன்முறைகள் தொடர்பில் விசேடமாக ஆராய்ந்துள்ளது.

இதன்போது, முப்படை, பொலிஸார், உளவுத் துறை என சுமார் 30 பேரிடம் இந்த ஆணைக் குழு விசாரணைகளை நடத்தி சாட்சியங்களை பதிவு செய்துள்ளது. இதன் அடிப்படையிலேயே, மேற்படி விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. (ஐ)

# உலக வங்கி ஆதரவில் இம்மாதம் முதல் முன்பள்ளி சிறார்களுக்கு பகல் உணவு!

கொழும்பு, செப். 13

உலக வங்கியின் ஆதரவின் கீழ் முன்பள்ளி பிள்ளைகளுக்கான பகல் உணவு வழங்கும் நடவடிக்கை இந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என ஆரம்ப குழந்தை பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

35 ஆயிரம் மலையக பிள்ளைகள் மற்றும் போசாக்கு குறைபாடு உள்ள பகுதிகளில் வாழும் 1 இலட்சத்து 55 ஆயிரம் சிறார்களுக்கு இந்த மதிய உணவு வழங்கப்படவுள்ளதாக அதன் பணிப்பாளர் நயன எஸ்.பி.கே.டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது, 90 ஆயிரம் போசாக்கு குறைபாடு உள்ள முன்பள்ளி சிறார்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதுடன், அதற்காக விநியோகத்தர்களுக்கு தலா உணவு ஒன்றுக்கு 30 ரூபா வழங்கப்படுகின்றது.

எனினும், அந்தத் தொகை போதாது என்பதால் அதனை 60 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கான பணம் உலக வங்கியின் உதவியின் கீழ் வழங்கப்படவுள்ளது.

மேலும் இந்த மாதம் முதல் காலை உணவுக்கு பதிலாக தற்போதைய செய்முறையை திருத்தி மதிய உணவாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ஐஸ் போதைப்பொருள் கடத்திய ஒருவர் கைது

அம்பாறை, செப். 13

ஏறாவூரிலிருந்து காத்தான்குடிக்கு ஐஸ் போதைப் பொருளை கடத்திய நபரை கைது செய்துள்ளதுடன், அந்நபரிடமிருந்து 10 கிராமும் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய விசேட பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் ஆலோசனைக்கமைய, குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரஹீமின் வழிகாட்டலில் விசேட பொலிஸ் குழுவினர், சந்தேகநபரை கைது செய்தனர்.

சந்தேகநபரை, கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளுடன் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் கூறினர். (அ)

ஈழநாடு





# இலங்கைக்கு உதவிகள் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தயார்!

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

இலங்கை எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலையில் இருந்து மீளப் பல்வேறு துறைகளின் ஊடாக உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போதே பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் இரு தரப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு துறைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடத் தூதுக்குழுப் பணிப்பாளர் சென் சென், பிரதிப் பணிப்பாளர் உத்சவ் குமார் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# ஜெனிவாவில் சிங்களவர்கள் போராட்டத்தில் குதித்தனர்!

### இலங்கை அரசை கண்டித்து

ஜெனிவா, செப். 13

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஜெனிவாவில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பெருமளவான சிங்கள மக்களும் பங்கேற்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியது.

இந்த நிலையில், இலங்கையில் அரசுக்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்களை பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் மூலம் அடக்கியமையை கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை, கைதுசெய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களை விடுவிக்குமாறு கோரி ஜெனிவாவில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)



# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி ஒக்ரோபர் 30இற்கு பின்!

கொழும்பு, செப். 13

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான வர்த்தமானி எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு பின்னர் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த நிலையில், தற்போது அதன் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்கு முன்னர் நடத்தி அதன் உறுப்பினர்களுக்கு தேவையான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான சூழலை தயார்ப்படுத்தவேண்டும்.

இதன்படி, நீடிக்கப்பட்டுள்ள கால அவகாசம் நிறைவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான உரிய அறிவிப்பை வெளியிடவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# எரிவாயு வாங்க உலக வங்கி வழங்கிய உதவியிலிருந்து ரூ.130 கோடி மோசடி!

### கோப் குழுவின் முன்னாள் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 13

நாட்டில் ஏற்பட்டிருந்த பாரிய எரிவாயு பற்றாக்குறையைப் போக்க உலக வங்கி வழங்கிய உதவியிலிருந்து ஒரு குறிப்பிட்ட குழுவினர் 130 கோடி ரூபாவை மோசடி செய்துள்ளதாக கோப் குழுவின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

36 டொலருக்கு கொள்வனவு செய்யவிருந்த ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவை 129 டொலருக்கு கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டமையால் இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு கஷ்டத்தில் இருக்கும் போது உலக வங்கி வழங்கிய உதவித் தொகையை கொள்ளையடிக்கும் நிலைக்கு இந்தக் கும்பல் வந்துவிட்டது எனக் கூறிய அவர், அந்தப் பணத்தை யார் எடுத்து யாருக்கு விநியோகம் செய்தார்கள் என்பது அப்பாவி மக்களுக்குத் தெரியாது என்று குறிப்பிட்டார். (அ)

# இராமேஸ்வரம் மீனவர் 6 பேர் நிபந்தனைகளுடன் விடுதலை

மன்னார், செப். 13

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று கடந்த 28ஆம் திகதி இலங்கைக் கடற்படையால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 6 பேர் நேற்று மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி நிரஞ்சனி முரளிதரன் மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்ததுடன் படகுக்கான விசாரணையை அடுத்த வருடம் மார்ச் மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அன்றைய தினம் படகின் உரிமையாளர் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# பெரமுனவுக்கு இளைஞர் படை திரட்டும் பொறுப்பு நாமலிடம்!

கொழும்பு, செப். 13

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்வதற்கான பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவரான மகிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ ஆகியோரே இந்த பொறுப்பை நாமலிடம் ஒப்படைத்துள்ளனர்.

அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே இதற்கான நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

மொட்டு கட்சிமீது இளைஞர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். மக்கள் போராட்டத்தின்போது இதனை காணமுடிந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் இளைஞர்களை இலக்கு வைத்து மாவட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் பரப்புரை நடவடிக்கையும் இடம்பெறவுள்ளது. (அ)

# அத்தியாவசிய பொருட்கள் வாங்கும்போது அவதானம்!

கொழும்பு, செப். 13

இலங்கையில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களை குறைந்த நிறையில் உற்பத்தி செய்து ஏமாற்றும் மோசடி வர்த்தகம் தொடர்பில் தகவல் வெளியாகயுள்ளது.

பிஸ்கட், சவர்க்காரம், பற்பசை, மிளகாய்த் தூள், மசாலா தூள் போன்ற பொருட்களில் இந்த மோசடி இடம்பெறுவதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

எடையைப் பொருட்படுத்தாமல் விலை குறைவாக இருப்பதாக நினைத்து கொள்வனவு செய்வோர் பணத்தை இழக்கின்றார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சில உற்பத்தியாளர்கள் இந்த பொருட்களை சலுகை என்று விளம்பரம் செய்து குறைந்த விலையில் விற்பனை செய்வதாகவும், ஆனால் சாதாரண விலையுடன் ஒப்பிடுகையில், அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில வகையான பிஸ்கட்கள் 50, 60, 70 கிராம் போன்ற சிறிய பைக்கெற்றுக்களில் தயாரிக்கப்பட்டு, விலை குறைவு என்ற போலிக்காரணத்தில் சந்தையில் வெளியிடப்பட்டு, நுகர்வோருக்கு நன்மை பயக்கும் என உற்பத்தியாளர்கள் விளம்பரம் செய்கின்றனர்.

நுகர்வோரை ஏமாற்றி சவர்க்காரம், மிளகாய் போன்ற மசாலாப் பொதிகளும் மக்களை இவ்வாறு ஏமாற்றி விற்பனை செய்வதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# போதைப்பொருள்களுடன் கொழும்பில் 8 பேர் கைது!

கொழும்பு, செப். 13

கொழும்பு-தெமட்டகொட பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்கள் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தொடர்மாடி குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 35 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 100 போதைப்பொருள் மாத்திரைகளுடன் பெண் ஒருவர், 7 ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மட்டு.சிறையில் இருந்து 29 கைதிகள் விடுதலை!

மட்டக்களப்பு, செப். 13

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 1 பெண்கைதி உட்பட 29 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம ஜெயிலர் எம்.மோகன்தாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த தண்டணைப் பணம் செலுத்தாத கைதிகளே நேற்று விடுதலை செய்யப்பட்ட கைதிகளாவர். (அ)

# கௌரவமான அரசியல் தீர்வு கோரி திருகோணமலையில் போராட்டம்!



திருமலை, செப். 13

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 43 ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், மல்லிகைத்தீவு பிரதேசத்தில் நேற்று முற்பகல் 10.30 மணி அளவில் இடம்பெற்றது.

இப் போராட்டமானது திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என கோசங்களை எழுப்பியவாறு பேரணியாக வருகைதந்ததுடன் தங்களின் உரிமை கோரிக்கையினையும் முன்வைத்தனர்.

இந்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள் ,விவசாய, மீனவ சங்கங்கள்,பெண்கள் அமைப்புகள் ,சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டதுடன் வருகை தந்த பொது மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான சாதக பாதக விளைவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டது.

அதே நேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள் வாங்கப்பட்டன.

இந்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாடுகளுக்கு செல்லும் பேக்கரித் தொழிலாளர்கள்!

கொழும்பு, செப். 13

பேக்கரி தொழில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில் கோதுமை மாவின் விலையில் எவ்வித குறைவும் ஏற்படவில்லை, இதனால் பேக்கரி தொழிலை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பேக்கரி பொருட்களின் விற்பனை குறைந்துள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது வாகனங்களில் பேக்கரி உணவு பொருட்களை கொண்டு சென்று விற்பனையில் ஈடுபடுவோர் வெகுவாக குறைந்துள்ளனர்.

பிரிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்களின் கோதுமை மா பேக்கரிகளின் தேவையில் 25 சதவீதத்தை மட்டுமே பூர்த்தி செய்கிறன.

தற்போது சிறிய அளவிலான பேக்கரிகள் பெருமளவு மூடப்பட்டுள்ளதாகவும், இத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் வெளிநாடுகளில் வேலைக்காக விண்ணப்பித்து வருவதாகவும், சிலர் தற்போது வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் தலைவர் தெரிவித்துள்ளார்.

துருக்கி உள்ளிட்ட நாடுகளில் இருந்து தனியார் வர்த்தகர்கள் கோதுமை மாவை இறக்குமதி செய்தால் கோதுமை மாவின் விலையில் எவ்வித குறைப்பும் ஏற்படாது என அவர் மேலும் கூறினார். (அ)

# பிரிட்டன் தூதரகம் சென்ற மகிந்த மகாராணிக்கு இரங்கல் தெரிவிப்பு



கொழும்பு, செப். 13

கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு நேற்று சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார்.

தூதரகத்துக்கு சென்ற மகிந்தவை இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் வரவேற்றார்.

பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நினைவுப் புத்தகத்தில் அனுதாபக் குறிப்பை எழுதிய மகிந்த, ஏழு தசாப்தங்களாக இரண்டாம் எலிசபெத் மகாராணி, உலக மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுபடுத்தினார். (அ)

# பிரதமரை மாற்றுவதற்கு எந்த தீர்மானமும் இல்லை!

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, செப். 13

பிரதமரை மாற்றுவதற்கு எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன மூத்த அரசியல்வாதி என்பதை தனது செயற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்கள் அரசியலமைப்பு ரீதியாக நியமிக்கப்பட்டார்கள் என்றும் அவர்களின் வாகன செலவீனம் மிகவும் குறைவானது என்றும் அவர் கூறினார்.



இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற தேனுக விதானகமகேவின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு!

திருமலை, செப். 13

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான கல்மெடியாவ தெற்கை சேர்ந்த பியதிஸ்ஸ பண்டார வயது என்பவரே யானைக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை விறகு எடுக்கச் சென்றவரே மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததனால் அவரை தேடிச் சென்ற வேலையிலேயே ஈச்சக்குளத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தம்பலகாமம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கல்முனை வடக்கு பிரதேச செயலக மக்கள் நேற்று எதிர்ப்பு போராட்டம்!



அம்பாறை, செப். 13

கல்முனை வடக்கு பிரதேச செயலத்துக்குட்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளைத் தடுப்பதாகவும் அரச சேவைகளைப் பெறுவதிலும் தேவையில்லாது தலையிட்டு அநீதி இழைக்கப்படுவதாகவும் கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகச் செயற்பாடுகளில் தேவையற்ற விதத்தில் தலையீடு செய்வதோடு மக்களுக்கான சேவைகளைப் பெறுவதிலும் தடையாக இருக்கும் அதிகாரிகளுக்கு எதிராகவும் அந்தப் பிரதேச மக்கள் இதன்போது தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்முனை 01 டி கிராம சேவகர் பிரிவில் இருந்த அரச காணிகள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்ததளிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான உறுதிப் பத்திரங்களைக் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வழங்காது முடக்கி வைத்திருந்ததற்கு எதிராகவும் அந்த உறுதிப் பத்திரங்களை தற்போது கல்முனை தெற்கு ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விட்டதற்கு எதிராகவும் இந்த மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கல்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட தங்களுடைய காணி உறுதிப் பத்திரங்களை கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு ஊடாகவே பெற்றுக் கொள்வோம் எனும் கோரிக்கையையும் இதன் போது மக்கள் முன்வைத்தனர்.

கல்முனை தெற்கு பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குச் சென்று தமது மகஜரை பிரதேச செயலாளர் அதிசயராஜிடம் கையளித்திருந்ததோடு இந்த விடயம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருக்குரிய மகஜர் ஒன்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஊடாக வழங்கப்பட்டது.(அ)

# பிரேமலால் ஜயசேகரவுக்கு இராஜாங்க அமைச்சு பதவி!



கொழும்பு,செப். 13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி), துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (அ)

# ‘மகாராணி மறைந்தார் மாமன்னர் நீடு வாழ்க!’

மாலி

> பிரிட்டிஷ் அரச பரம்பரையில் மிகநீண்ட காலம் அரசோச்சிய இரண்டாம் எலிஸபெத் மகா ராணி, உலக வரலாற்றில் உன்னத மான ஒருவராக தன்னை எழுதிச் செல்கிறார்.




‘என்னுடைய முழு வாழ்வையும் - அது நீண்டதோ அல்லது குறுகியதோ - உங்களது சேவைக்கும், நாம் எல்லோரும் இணைந்த எமது பெரும் சாம்ராஜ்ய குடும்பத்துக்கான சேவைக்கும் முழுமையாக அர்ப்பணிப் பேன் என்பதை நான் உங்கள்முன் பிர கடனப்படுத்துகிறேன்’ - தந்தையார் 6ஆம் ஜோர்ஜ் மன்னரின் திடீர் மறை வையடுத்து தன்னுடைய 25ஆவது வயதில் (1952) பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தின் மகாராணியான இளவரசி எலிஸபெத், தனது முதல் செய்தியாக இப் பிரகடனத்தை விடுத்தார்.

எழுபது ஆண்டுகளின் பின்னர் 96ஆவது வயதில், தன்னுடைய ஆட் சிக் காலத்தின் 15ஆவது பிரதமராக லிஸ் ரஸ் தனது அரசாங்கத்தை அமைக்க சம்பிரதாயபூர்வமாக அங்கீகரித்த இரு தினங்களில் (செப்ரெம்பர் 8) வெளி வந்த மகாராணியின் மரண செய்தியில், மகாராணியின் அந்த பிரகடனம் பெரிதாய் எதிரொலித்தது.

மறுநாள், புதிய பிரதமர் லிஸ் ரஸ் ஸின் புதிய அமைச்சரவையை மகா ராணி சந்திக்கும் ஏற்பாடு, மகா ராணியின் வைத்தியர்களின் ஆலோச னையில் திடீரென இரத்தானது.

புதிய பிரதமரின் முதல் பாராளு மன்ற அமர்வு அதன் மறுநாள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது, முன்னரெப்போதுமில்லாதவிதத்தில் பங்கிங்ஹாம் மாளிகை அறிவித்த லொன்று பாராளுமன்ற சபாநாய கருக்கு வந்தது. மருத்துவ கண்காணிப் புகளையடுத்து மகாராணியின் உடல் நலத்தில் அவரது வைத்தி யர்கள் அக்கறைகொள்வதாகவும், தொடர்ந்து அவர் கண்காணிப்பிலி ருக்க பரிந்துரைக்கப்பட்டிருப்ப தாகவும் வந்த அத் தகவலோடு, அரச குடும்பத்தவர்கள் அவசர அவ சரமாக ஸ்கொட்லாந்தில் மகாராணி தங்கியிருந்த பல்மோரல் மாளி கைக்கு விரைவதாகவும் வந்த செய்தி, ‘செய்தி’யை சூசகமாக உணர்த்தியது. செய்தி சனல்களின் கமெராக்கள் பல்மோரலையும் மற்றும் அரச மாளி கைகளையும் நோக்கி குவிந்தன. பிபிசி அதன் நிகழ்ச்சிகளை இடைநிறுத்தியது

பின்னர் மாலையில், உறுதிப்படுத் தப்பட்ட அந்தச் செய்தி வெளியானது. அரச சம்பிரதாயப்படி, மகாராணியின் மறைவு பற்றிய அறிவித்தல் பங்கிங் ஹாம் மாளிகை வாயில் பகுதியில் சட்டமிடப்பட்டு மாட்டப்பட்டது.

பிரிட்டிஷ் அரச பரம்பரையில் மிகநீண்ட காலம் அரசோச்சிய இரண்டாம் எலிஸபெத் மகா ராணி, உலக வரலாற்றில் உன்னத மான ஒருவராக தன்னை எழுதிச் செல்கிறார்.

முதுமை காரணமாக அவரின் நடமாடும் திறன் அண்மைக் காலத்தில் பாதிப்புக்குள்ளானது. தான் கலந்துகொள்வதான நிகழ் வுகளை அவர் வெகுவாகவே குறைத்துக்கொண்டார். அவ்வித மாகத்தான், பிரிட்டனின் கொன்ச வேட்டிவ் கட்சி தனது புதிய பிரத மரை தேர்ந்தபோது, மகாராணி யின் அங்கீகாரத்துக்காக அவர் வழக்கமான விதத்தில் பக்கிங்ஹாம் மாளிகைக்கு செல்லாமல் பல்மோரல் செல்ல நேர்ந்தது.

பொதுவாக, கோடை காலத்தில் ஸ்கொட்லாந்திலுள்ள பல்மோரல் மாளிகையில் மகாராணி தங்குவது வழக் கமானது. எனினும், அரச அலுவல்களை அவர் லண்டனிலுள்ள பக்கிங்ஹாம் மாளிகையிலேயே மேற்கொள்வார்.

முன்னதாக, 1885இல் விக்ரோறியா மகாராணி தனது ஆட்சியின் கடைசி பிரதமரான சலிஸ்பரி பிரபுவின் நியமனத்தை பல்மோரல் மாளிகையில் மேற்கொண்டிருந்தார். அவருக்கு முன்னர் பிரதமராகவிருந்த பெஞ்சமின் டிஸ்ரேலியை இங்கிலாந்தின் தென் கரையிலுள்ள ஐல் ஒவ் வைற்றில் அப்போது அரச வதிவிடமொன்றாக விருந்த ஒஸ்போண் இல்லத்தில் விக்ரோறியா மகாராணி நியமித்தார் (1868).

அத்துடன், ஓய்வுக்காக பிரான்சின் தென்பகுதி ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஏழாம் ஜோர்ஜ் மன்னர், ஹெச். ஹெச். அஸ்குயித்தின் பிரதமர் நியமனத்தை அந்த ஹோட்டலில் வழங்கினார் என்றும் (1908) குறிப்புக்கள் உள்ளன. எலிஸபெத் மகாராணியின் நியமனம்பெற்ற முதலாவது பிரதமர் வின்சன் சேர்ச்சில்.

வயதில் மகாராணிக்கு தந்தையைப் போலவிருந்தார். பதினைந்து பிரதமர் களில் கடைசி பிரதமரான லிஸ் ரஸ், மகாராணிக்கு பேர்த்திபோன்றவர். வின் சன் சேர்ச்சிலுக்கும் லிஸ் ரஸ்ஸூக்குமான வயது வித்தியாசம் 101. லிஸ் ரஸ் பிரிட்டனின் 56ஆவது பிரதமர்.

1952இல் கென்யா பயணமான இள வரசியையும் கணவர் பிலிப் கோமானை யும் விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்த தந்தையார் 6ஆம் ஜோர்ஜ் மன் னர் ஐந்து தினங்களில் (பெப்ரவரி 6) மரணமாகிவிட, சடுதியாகவே மகாராணி யாக நேர்ந்த இளவரசி எலிஸபெத், எழு பது ஆண்டுகள் அரசோச்சி, பிரிட்டனின் புதிய பிரதமரை பதவியிலமர்த்தி வழியனுப்பி வைத்த இரு தினங்களில் திடீரெனவே மரணமுற்றார்.



ஆக, ஏழு தசாப்த கால உலகம் கண்ட - எதிர்கொண்ட மாறுதல்களிலும் - சவால் களிலும், உலகமும் பிரிட்டனும் கண்ணியத்துடன் ஏற்றுக்கொள் ளும் விதத்தில் அவர் தன்னை அநுசரணையோடு நிலைநாட் டியிருக்கிறார்.

குடும்பத்திலும் அவர் கணிச மான சவால்களை எதிர்கொண் டார். முடியாட்சிக்கு எதிரான குரல்களும் எழுந்தன. அவரது ஆட்சியை - வாழ்வை கடை சியாக நிறைப்பது, லிஸ் ரஸ் புதிய பிரதமராக அங்கீகாரம் பெறும் புகைப்படம்.




இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் 1994இல், பிறைற்ரனில் நடைபெற்ற லிபரல் ஜனநாயக கட்சி மாநாட்டில் ஒரு 19 வயது யுவதி, முடியாட்சியை ஒழிக்க ஓங்கி குரல் எழுப்பினர். ‘ஆளப் பிறந்தவர்கள் எவரும் இல்லை’ என்றார். அந்த யுவதி வேறு யாருமல்லர் - லிஸ் ரஸ்.

‘பிரிட்டனின் வெற்றி என்ன என்பதை நான் மேலும் புரிந்து கொள்ள தொடங்கினேன். சுதந்திரமான ஜனநாயகத்துக்கு ஆதரவாகும் முடியாட்சி பிரிட் டனின் அந்த வெற்றிக்கான பிரதான காரணம் என்பதை நான் இப்போது உணர்கிறேன்’ என்கிறார் இப்போது கன்சர் வேட்டிவ் கட்சியில் பெரும் பான்மை ஆதரவுடன் பிரதமரா கியிருக்கும் லிஸ் ரஸ்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# மகாராணி மறைந்தார் ...



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துக்கணிப்புகளின்படி, 62 வீதத்துக்கும் அதிகமானவர்கள் எப்போதுமே முடியாட்சிக்கு ஆதரவானவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், அது முடியாட்சிக்கானதா அல்லது எலிஸபெத் மகாராணிக்கானதா என்பதும் ஒரு கேள்வி.

மகாராணி எலிஸபெத் அரியணையிலமர்ந்ததும்கூட எதிர்பாராததுதான். தந்தையார் 6ஆம் ஜோர்ஜ் மன்னர் 5ஆம் ஜோர்ஜ் மன்னரின் இரண்டாவது புதல்வர். 1936இல் 5ஆம் ஜோர்ஜ் மன்னர் காலமானபோது முடிக்குரிய இளவரசரான மூத்த புதல்வர் 8ஆவது எட்வேர்ட் மன்னர் என்று அழைக்கப்பட்டு முடிசூடினார்.

இருதடவை விவாகரத்துபெற்ற அமெரிக்க பெண் ஒருவரை மணம் செய்துகொள்வதற்காக அதே ஆண்டில் அவர் முடியைத் துறக்க, இரண்டாவது புதல்வரான மகாராணி எலிஸபெத்தின் தந்தையார், 6ஆம் ஜோர்ஜ் மன்னராக அரசேறினார். அதனால், அவருடைய இரு புதல்விகளில் மூத்தவரான இளவரசி எலிஸபெத், முடிக்குரியவரானார்.

இப்போது, மகாராணி இரண்டாம் எலிஸபெத் மரணமுற்ற அதே கணம், அவரின் மூத்த புதல்வரான வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், பிரிட்டிஷ் முடியாட்சியின் 3ஆவது சார்ள்ஸ் மன்னராகிறார். மகாராணி மறைவுற்ற இரண்டு தினங்களில் சென். ஜேம்ஸ் மாளிகையில் வைபவரீதியில் அவர் மன்னராக பிரகடனப்படுத்தப்பட்டார். மகாராணியின் மரண வைபவங்கள் முடிவுற்றபின்னர், பிறிதொரு தினத்தில் அவரது முடிசூட்டு விழா நடைபெறும். எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டு விழா அவர் பதவியேற்ற சுமார் ஒன்றரை ஆண்டின் பின்னர், 1953 ஜூன் 2ஆம் திகதி நடைபெற்றது.

முடிக்குரிய இளவரசரான வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் மன்னரானதைத் தொடர்ந்து, அவரது மூத்த புதல்வர் வில்லியம் முடிக்குரிய புதிய வேல்ஸ் இளவரசராக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் அரச பாரம்பரியத்தில் மன்னரின் மனைவியை இராணி என்றல்லாமல் 'இராணி மனைவி' (Queen Consort) என்று அழைப்பது மரபு. மன்னர் சார்ள்ஸ் தொடர்பில் இதில் ஏற்படவல்ல அல்லது இது ஏற்படுத்தவல்ல இடர்பாடுகளை நன்கே உணர்ந்த மகாராணி, அவர் 'இராணி மனைவி' என்றே அழைக்கப்படுவதை அண்மையில் அவரது 70ஆண்டுகள் ஆட்சி நிறைவின்போது பிரகடனப்படுத்தியிருந்தார்.

எலிஸபெத் மகாராணியின் ஆட்சியில் இளவரசி டயனாவின் மரணம் ஏற்படுத்திய பாதிப்பு மிகப்பெரிது. பொது மக்களினதும் பத்திரிகைகளினதும் கடுமையான விமர்சனத்துக்கும் அவர் ஆளானார். 'இராணி மனைவி' என்பது முடிக்குரிய இளவரசர் வில்லியத்தின் தாயான டயானாவுக்குரியதாகவே பெரும்பாலும் பலராலும் உணர்வுபூர்வமாக உணரப்பட்டது. அதனால், கமிலா 'இராணி மனைவி' என்றல்லாமல், 'இளவரசி மனைவி' (Princess Consort) என்று அழைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து பரவலாகவே இருந்ததில்தான் அதற்கான முற்றுப்புள்ளியாக மகாராணி இப் பிரகடனத்தை மேற்கொண்டிருந்தார். உண்மையில், டயானாவின் மரணம்தான் மகாராணிக்கு மக்களை வெகுவாக உணர்த்தியது என்பது பொதுவாக நம்பப்படுவது.

கிரேக்க - டனிஸ் இளவரசரான பிலிப் மவுண்பேட்டனைத் தனது 13ஆவது வயதில் விரும்பத் தொடங்கியதில், 1947இல் 21 வயதாகும்போது மகாராணி அவரை மணந்தார், மகாராணியின் நான்கு பிள்ளைகளில் மூவர் விவாகரத்து செய்துகொண்டனர். குடும்ப உறவு தொடர்பான புரிதலிலும், தனது மத நம்பிக்கையிலும் மணவாழ்வை பெரிதாக விரும்பும் மகாராணி. 'விவாகரத்தும், பிரிந்து வாழ்வதும் இன்று எமது சமூகத்தைப் பீடித்த இருள்' என்று விசனப்பட்டார்.

'மாட்சிமை தங்கிய மகாராணியின் சேவை' இனி, 'மாட்சிமை தங்கிய மன்னரின் சேவை' என்று மாறுவதற்கான பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மகாராணி எலிஸபெத் மரணம், வரலாறு ஸ்தம்பிக்கும் ஒரு தருணம்.

பல நாடுகள் அவரது ஆட்சிக்காலத்தில் சுதந்திரம் பெற்றுவிட்டபோது, ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்பட 15 நாடுகளின் அரசியாக அவர் விளங்கினார். 54 பொதுநல நாடுகளின் தலைவியாகவுமிருந்தார். 1972இல் இலங்கை குடியரசாகும்வரை, சுதந்திரத்தின் பின்னரும், இலங்கையின் அரசியாக அவர் விளங்கினார்.

மகாராணியின் சீன, ரஷ்ய, தென் ஆபிரிக்க, வட அயர்லாந்து பயணங்கள் முக்கியமானவை. இலங்கைக்கு இரண்டு தடவைகள் அவர் விஜயம் செய்தார். முதலில் 1954இலும், பின்னர் 1981இலும் கணவருடன் அவர் வந்தார். முதல் விஜயத்தின்போது தனது 28ஆவது பிறந்ததினத்தை (ஏப்ரல் 21) அவர் இலங்கையில் கழித்தார். கணவர் இளவரசர் பிலிப், பேராதனை பல்கலைக்கழகத்தை அப்போது திறந்து வைத்தார். முதலாவது விஜயத்தின் போது சேர் ஜோன் கொத்தலாவலை இலங்கையின் பிரதமராகவும், 1981இல் ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாகவுமிருந்தனர். 2013ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநல நாடுகளின் 23ஆவது உச்சி மாநாட்டுக்கு மகாராணி வரவிருந்தபோதும் பயண அசௌகரியங்களைக் காரணமாககூறி, அவருக்கு பதிலாக இளவரசர் சார்ள்ஸ் அதில் கலந்துகொண்டார். ஆனால், இலங்கை அரசுமீது அப்போது நிலவிய யுத்த குற்றச்சாட்டுக்களும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரங்களுமே உண்மையில் காரணம் என்றும் பேசப்பட்டது.



ஸ்கொட்லாந்திலிருந்து 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை லண்டன் வந்துசேரும் மகாராணியின் பூதவுடல், பக்கிங்ஹாம் மாளிகையில் வைக்கப்பட்டு, மறுநாள் புதன்கிழமை மாலையிலிருந்து 18ஆம் திகதி ஞாயிறுவரை பாராளுமன்ற வளாகத்திலமைந்த வெஸ்ற்மின்ஸ்ரர் மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

19ஆம் திகதி திங்கட்கிழமை காலை பூதவுடல் அங்கிருந்து வெஸ்ற்மின்ஸ்ரர் அபேக்கு எடுத்துச்செல்லப்பட்டு, காலை 11 மணிக்கு அரச மரியாதைகளுடனான இறுதி நிகழ்வுகள் நடைபெறும்.

வரலாற்று சிறப்புமிக்க வெஸ்ற்மின்ஸ்ரர் அபே தேவாலயத்தில்தான் முடிசூடல், திருமணங்கள் உள்ளிட்ட அரச குடும்ப வைபவங்கள் நிகழ்கின்றன. உலக தலைவர்கள் பலரும் இங்கு இந்த ஆராதனையில் கலந்துகொள்வார்கள். அதன்பின்னர், மகாராணியின் அதிவிருப்புக்குரிய வாசஸ்தலமான வின்சர் கோட்டைக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு அடக்கம் செய்யப்படும். அன்றைய தினம் பிரிட்டனில் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு தனது 99 ஆவது வயதில், மகாராணியின் கணவர் பிலிப் கோமகன் மரணமுற்றார்.

வரலாற்றில் ஒரு வியத்தகு பெருமாட்டி மகாராணி எலிஸபெத். இரண்டு தடவைகள் அவருடன் கைகொடுத்து உவந்தமை ஒரு பத்திரிகையாளனுடைய சிறப்புரிமை. 1981இல் அவருடைய இலங்கை விஜயத்தின்போதும், பின்னர் 2002இல் அவருடைய பொன்விழா ஆண்டில், அவர் பிரிட்டனில் முதன்முதலாக ஓர் இந்து ஆலயத்துக்கு செல்வதாய் அமைந்த லண்டன் உயர்வாயிற் குன்று முருகன் ஆலய விஜயத்தின் போதும் அவருடன் கைகுலுக்கினேன். 'ஈழநாடு' நிருபராகவும், 'நாழிகை' சஞ்சிகையின் ஆசிரியராகவும் இவை அமைந்தன.



எவ்வளவு மெச்சினாலும், எவ்வளவு சொன்னாலும் மகாராணி பேனா பிடிக்கும் அழகு எனக்கு மிகவும் பிடித்தமானது.

'மகாராணி மறைந்தார் மாமன்னர் நீடு வாழ்க!' - முடியாட்சியின் தொடரை உணர்த்தும் இந்த வாசகம் இவ்வேளையில் சம்பிரதாயமானது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் ................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ....................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : ................................................... (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ...................................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : ..................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ..............................................................................

ii) old / How / you? / are : .......................................................................... (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ...............................................................

ii) தொளஹ : ........................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** 

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

## கல்வி tv CHANNEL-1

**13.09.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**13.09.2022 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆறு இலட்சம் மக்கள் பட்டினி இருக்க இராஜாங்க அமைச்சர்கள் தேவையா?

## கிண்ணியா நகர சபை உறுப்பினர் கேள்வி

**மட்டக்களப்பு, செப். 13**

**நாட்டில் ஒருவேளை உணவின்றி 6 இலட்சம் பேர் பட்டினியால் வாடுவதாக உலக உணவு ஸ்தாபனம் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், 37 இராஜாங்க அமைச்சர்களின் நியமனம் தேவையா என நல்லாட்சிக்கான தேசிய முண்ணனியின் கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.நசுருதீன் கேள்வியெழுப்பினார்.**

கிண்ணியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் மீது அக்கரை செலுத்தாத பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு இரா ஜாங்க அமைச்சர்களின் நியமனம் வேதனையளிக்கிறது.

அன்றாட வாழ்வாதாரத்துக்குத் தடுமாறும் அப்பாவி மக்களின் நிலையை கருத்திற்கொள்ளாது, அரசாங்கம் சார்ந்த கட்சிப் பிரதிநிதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி கட்சிகளை கட்டியெழுப்பக் காட்டும் கரிசனை நாட்டின் மீதும் மக்கள் மீதும் காட்டவில்லை.

யுத்தத்தின் பின் மகிழ்ச்சியான வாழ்வு வாழக் கனவு கண்ட மக்களின் நிலை தற்போது சின்னா பின்னமாகியுள்ளது. இந்நிலை தொடருமானால் மக்களின் நிலைமை மேலும் மோசமடையும். இராஜாங்க அமைச்சுக்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. மக்கள் நலனில் அக்கறை செலுத்த முன்வாருங்கள்-என்றார். (அ)

# ஆசியக் கிண்ண வெற்றி கொண்டாட்டம் கிழக்கில்

## இளைஞர்கள் ஹோர்ன் ஒலி எழுப்பி ஆராவார மகிழ்ச்சி



மட்டக்களப்பு, செப். 13

மிகவும் விறுவிறுப்பாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்ற ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி எட்டு ஆண்டுகளின் பின்னர் அபார வெற்றி பெற்று ஆசிய கிண்ண சம்பியனானதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண இளைஞர்கள் ஆரவாரம் எழுப்பி தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

வரலாற்றில் முன்னர் எப்போதுமில்லாதளவில் பெரும் எதிர்பார்ப்புடன் இடம்பெற்ற இப்போட்டியில் இலங்கை அணி வெல்ல வேண்டுமென்ற பேரவாவில் மொத்த தேசத்தின் பார்வையும் ஐக்கிய இராச்சியத்தை நோக்கித் திரும்பி இருந்தது. சுவாரஸ்யமான இறுதிப்போட்டியை நேரலையாகக் கண்டுகளிக்கும் வகையில் கல்முனை கடற்கரை வீதியில் ஹூதா திடலில் சமூக சேவை அமைப்பு அகன்ற திரை ஒழுங்கினைச் செய்திருந்தது. இப்போட்டி நேரலையை பிரதேசத்திலுள்ள ஆயிரக்கணக்கான இலங்கை, பாகிஸ்தான் அணிகளின் ஆதரவாளர்கள், கிரிக்கெட் ரசிகர்கள் கண்டு களித்தனர்.

இறுதியில் இலங்கை அணி வெற்றி பெற்றதையடுத்து போட்டியை நேரலையாகக் கண்டு களித்த இளைஞர்கள் ஆராவாரமெழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன், ஆசிய கிண்ணத்தை வென்று சாதனை படைத்த அணியினருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்து தமக்கிடையே மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டதுடன் வெடிகளை வெடித்தும் கொண்டாடினர். (அ)

# இலங்கையை சைக்கிளில் சுற்றிவந்த இளைஞர்களுக்கு அமோக வரவேற்பு!




மட்டக்களப்பு, செப். 13

“ஓசோன் ரைட்” எனும் கருப்பொருளில் இலங்கையின் கரையோர பிரதேசங்களுடாக சைக்கிளில் சுற்றி கடல் மற்றும் கரையோர பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பிலிருந்து 1300 கிலோ மீற்றர் பயணம் மேற்கொண்ட மட்டக்களப்பின் இளைஞர்கள் இருவருக்கும் நேற்று முன்தினம் மாலை பயண நிறைவும், வரவேற்பும் கௌரவிப்பும் கல்லடி கடற்கரையில் நடைபெற்றது.

“ஓசோன் பயோமி” அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி பழைய மாணவரான சஞ்ஜீவன் அமலநாதன் மற்றும் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) பழைய மாணவரான அனாமிகன் குமாரசிங்கம் ஆகியோரின் பெற்றோர் நண்பர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், இரு இளைஞர்களையும் பாராட்டி கௌரவித்தார்.

கடல் சுற்றுப்புறச் சூழலையும் கடல் வளத்தையும் பாதுகாப்பதற்காக சமூகத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும் நோக்கில் “ஓசோன் பயோமி” அமைப்பு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை சைக்கிளில் பயணம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயணம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.

இரண்டு சைக்கிள் ஓட்டிகளும் 11 நாட்கள் கொண்ட நீண்ட சைக்கிள் சவாரியை மேற்கொண்டனர். இப்பயணத்தின் நோக்கமானது கடல் பாதுகாப்பை மேம்படுத்தி கடலை பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து உள்ளூர் மக்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் கடல் வளங்களை கையாளும் போது பொறுப்பை உருவாக்குவதுமாகும்.

இலங்கையின் கரையோர மாவட்டங்களான மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், புத்தளம், நீர்கொழும்பு, கிக்கடுவை, ஹம்பாந்தோட்டை, பொத்துவில் ஊடாக மீண்டும் மட்டக்களப்பை வந்த இப்பயணம் மொத்தமாக 1,300 கிலோ மீற்றர்கள் 11 நாட்கள் கொண்டதாக அமைந்துள்ளது. (அ)

# அட்டாளைச்சேனையில் பைசர் தடுப்பூசி ஏற்றல்

மட்டக்களப்பு, செப். 13

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கோவிட்-19 பைசர் தடுப்பூசி தொடர்ந்து ஏற்றப்பட்டு வருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

இதுவரை எதுவித தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்களுக்கான தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள், இரண்டாவது தடுப்பூசியையும், இரண்டாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் மூன்றாவது தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

கோவிட்-19 மூன்றாவது தடுப்பூசி பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 04ஆவது பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சகல பாடசாலைகளிலும் 12 தொடக்கம் 15 வயது வரையிலான முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு, பைஸசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வெளிநாடு செல்பவர்களுக்கு கோவிட்-19 பைசர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டு மெனவும், பொதுச் சுகாதார பரிசோதகர்களைத் தொடர்புகொண்டு தமக்கான தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கைகள் துரிதம்



மட்டக்களப்பு, செப். 13

காத்தான்குடி கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

கரையோரம் பேணல் திணைக்களம், காத்தான்குடி பிரதேச செயலகம் என்பவற்றுடன், காத்தான்குடி நகர சபையும் இணைந்து, இந்தக் கடல் அரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், நேற்று முன்தினம் இங்கு வருகை தந்து, மண் மூடைகளை கட்டி கரையோரம் இட்டு, அங்குள்ள கட்டடங்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது காத்தான்குடி நகர சபை தவிசாளர் அஸ்பர் களத்தில் நின்று வேலைகளை துரிதப்படுத்தினார்.

காத்தான்குடி கடற்கரையில் கடலரிப்புக் காரணமாக அப்பகுதி மீனவர்கள் மற்றும் கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஒருவாரத்துக்கும் மேலாக இங்கு கடலரிப்பு ஏற்பட்டு வருவதுடன், காத்தான்குடி கடற்கரையின் ஏத்துக்கால் பகுதியிலேயே கடலரிப்பு அதிகமாக ஏற்பட்டுள்ளது.

இந்தக் கலரிப்புக்காரணமாக மீன்பிடிப் படகுகளை கடலுக்கு கொண்டு செல்வதிலும் மீனவர்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்தனர். (அ)

# கார்கிவ், டொனெட்ஸ்கில் ரஷ்யா உக்கிர தாக்குதல்!

## 9 மில்லியன் மக்கள் மின்சாரம் இன்றி தவிப்பு

*கீவ், செப். 13*

கார்கிவ் மற்றும் டொனெட்ஸ்க் உள்ளிட்ட கிழக்குப் பிராந்தியங்களில் ரஷ்யா நடத்தி வரும் உக்கிர ஏவுகணைத் தாக்குதல்கள் காரணமாக மின் கட்டமைப்புகள் செயலிழந்து, சுமார் ஒன்பது மில்லியன் மக்கள் மின்சாரத்தை இழந்து இருளில் மூழ்கியுள்ளனர்.

உக்ரைன் கிழக்கில் ரஷ்யப் படைகள் முன்னர் கைப்பற்றிய சுமார் 3,000 சதுர கி.மீ. பரப்பளவு நிலங்களை உக்ரைன் மீளக் கைப்பற்றி தொடர்ந்து முன்னேறி வரும் நிலையிலேயே கார்கிவ் மற்றும் டொனெட்ஸ்க் உள்ளிட்ட கிழக்குப் பிராந்தியங்களில் ரஷ்யா உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

உக்ரேனிய எதிர் தாக்குதலுக்கு பழி வாங்கும் வகையில் மின் கட்டமைப்புகளை இலக்கு வைத்து ரஷ்யா தாக்குதல்களை நடத்தி வருகிறது என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



மக்கள் குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை குறிவைத்து ரஷ்யா தாக்குதல்களை நடத்திவரும் நிலையில் கார்கிவ் நகரின் பெரும் பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக அந்நகர மேயர் கார்கிவ் மேயர் இஹோர் டெரெகோவ் தெரிவித்துள்ளார். அத்துடன், மின்சாரம் இல்லாததால் நீரைப் பெற்றுக் கொள்ள முடியாது மக்கள் அவலங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

உக்ரேனிய இராணுவத்தின் சமீபத்திய வெற்றிகளுக்கு பழிவாங்கும் ஒரு மோசமான மற்றும் இழிவான ரஷ்யாவின் பதிலடியே இது எனவும் கார்கிவ் மேயர் இஹோர் டெரெகோவ் குறிப்பிட்டார்.

இதேவேளை, கார்கிவ் நகரம் மீது தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களை ரஷ்யா நடத்தி வருவதாக அங்குள்ள சர்வதேச செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பிராந்தியத்தில் மக்கள் அமைதி பேணுமாறு கார்கிவ் மேயர் இஹோர் டெரெகோவ் மற்றும் பிராந்திய ஆளுநர் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

தாக்குதல்களால் ஏற்பட்ட தீ பரவலைக் கட்டுப்படுத்தவும், நீர், மின் வழங்கலை மீளமைக்கவும் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ரஷ்யா உக்கிர தாக்குதல் நடத்திவரும் பகுதிகளுக்கு ஊடகவியலாளர்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனினும் பெப்ரவரி 24 பேருக்குப் பின்னர் உக்ரைன் கிழக்கில் ரஷ்யா கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பல பகுதிகளை உக்ரேனிய படைகள் மீட்டுள்ளதை அங்குள்ள ஊடகவியலாளர்கள் உறுதி செய்துள்ளனர். (அ)



# டுபாயில் நிலவின் வடிவத்தில் பிரமாண்டமான ஹோட்டல்!

*டுபாய், செப். 13*

டுபாயில் நிலவு வடிவில் பிரம்மாண்டமாக சொகுசு விடுதி கட்டப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

நிலவின் மேற்பரப்பு போன்ற தோற்றத்துடன் வடிவமைக்கப்பட உள்ள அந்த சொகுசு விடுதியின் கட்டுமானப் பணிகள் 48 மாதங்களில் முடிவடையும் என்று கூறப்படுகிறது.

இலங்கை மதிப்பில் 179 226 கோடி ரூபா செலவில் கட்டமைக்கப்பட உள்ள அந்த சொகுசு விடுதியின் மொத்த உயரம், 735 அடியாக இருக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

நலவாழ்வு மையம், இரவு விடுதிகள், வில்லா குடியிருப்புகள் உள்ளிட்டவையும் அதில் இடம்பெறும் எனச் சொல்லப்படுகிறது. (அ)

# உக்ரைனில் சந்திக்கும் தோல்விகள் ரஷ்ய தேசியவாதிகள் கடும் சீற்றம்!



*மொஸ்கோ, செப். 13*

உக்ரைனில் ரஷ்யா கைப்பற்றிய முக்கிய இடங்களை மீண்டும் உக்ரைன் படைகளிடம் இழந்து வரும் நிலையில் ரஷ்ய அரசு மீது ரஷ்ய தேசியவாதிகள் கடும் ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

உக்ரைன் போரில் இறுதி வெற்றியை உறுதி செய்ய உடனடியாக மாற்றங்களைச் செய்யுமாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

மார்ச் மாதம் உக்ரேனிய தலைநகர் கீவ்வை ஆக்கிரமிக்கும் முயற்சி கைகூடாததை அடுத்து, ரஷ்ய படைகள் அங்கிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து கார்கிவ் மாகாணத்தில் இசியம் நகரம் உட்பட பல முக்கிய பகுதிகளை உக்ரைன் படைகள் ரஷ்யாவிடம் இருந்து கடந்த சில நாட்களில் மீட்டுள்ளன.

இவ்வாறு ரஷ்யப் படைகள் உக்ரைனில் தோல்விகளை சந்தித்து வரும் நிலையில் உக்ரைன் போரில் இறுதி வெற்றியை உறுதிசெய்ய உடனடியாக மாற்றங்களைச் செய்யுமாறு ரஷ்யா போர் நடவடிக்கையில் முக்கிய தலைமை புள்ளியாக இருக்கும் செச்சென் குடியரசின் தலைவர் ரம்ஜான் கதிரோவ் அழைப்பு விடுத்துள்ளார்.

டெலிகிராம் செயலியில் வெளியிடப்பட்ட 11 நிமிட குரல் பதிவில் அவர் இந்த அழைப்பை விடுத்தார். இசியம் நகரை உக்ரைன் படைகளிடம் இழந்ததை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, உக்ரைனில் சந்தித்துவரும் தோல்விகள் குறித்து ரஷ்ய அரசின் மௌனம் ரஷ்ய தேசியவாதிகள் மத்தியில் கோபத்தைத் தூண்டியுள்ளது.

தோல்வி குறித்த செய்திகள் வெளிவரும் நிலையில் கார்கிவ் பகுதிக்கு மேலதிக துருப்புக்களை அனுப்பியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் வான்வழியிலும் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகள் மூலமும் கார்கிவில் உள்ள உக்ரைன் நிலைகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருவதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் ரஷ்ய படைகளின் தோல்விகள் குறித்து ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியான புட்டினோ மற்றும் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்குவோ ஆகியோரிடம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர்கள் பதிலளிக்க மறுத்துவிட்டனர்.

தனது தோல்விகளை ஒப்புக்கொள்ள மறுத்த ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு, படைகளை மீண்டும் ஒருங்கிணைக்கும் நோக்கில் தந்திரோபாய பின்வாங்கல் நடவடிக்கையாகவே இதனை விபரித்துள்ளது.

இவ்வாறான நிலையில் மோதலின் முன்னணி போர் முனைகளில் ஒன்றை ரஷ்யா இழந்துள்ளதை உக்ரைனின் கிழக்கு டான்பாஸ் பகுதியில் 2014 ஆம் ஆண்டு போரைத் தொடங்க உதவிய ஒரு தேசியவாத போராளியும் முன்னாள் மத்திய பாதுகாப்பு சேவை அதிகாரியுமான இகோர் கிர்கின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதனை 1905 ஆம் ஆண்டு முக்டென் போருடன் அவர் ஒப்பிட்டார். இது ரஷ்ய-ஜப்பானியப் போரில் பேரழிவுகரமான தோல்வியாகும். ரஷ்யாவின் 1905 புரட்சியைத் தூண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தடுப்புச்சுவரை தாண்டி சார்ள்ஸின் காரை நோக்கி ஓடிய ஒருவர் கைது!

*லண்டன், செப். 13*

பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் செல்லும் வழியில் தடுப்புச் சுவரை தாண்டி குதித்து மன்னர் சார்ள்ஸின் காரை நோக்கி ஓடிய நபர் கைது செய்யப்பட்டார்.

இங்கிலாந்து ராணி எலிசபெத் மரணம் அடைந்ததை தொடர்ந்து அந்நாட்டு அரசராக சார்ள்ஸ் அறிவிக்கப்பட்டார். 73 வயதான சார்ள்ஸ் மறைந்த ராணி எலிசபெத்தின் மூத்த மகன் ஆவார்.

ராணி எலிசபெத் தங்கி இருந்த ஸ்கொட்லாந்து அரண்மனைக்குச் சென்ற சார்ள்ஸ் தனது தாயார் ராணி மறைவுக்கு பிறகு அரசராக பக்கிங்ஹாம் அரண்மனைக்கு திரும்பினார்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் செல்லும் வழியில் தடுப்புச் சுவரை தாண்டி குதித்து மன்னர் சார்ள்ஸின் காரை நோக்கி ஓடிய நபர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.




அந்த வீடியோவில் பக்கிங்காம் அரண்மனைக்கு செல்லும் மன்னர் சார்ள்ஸை காண சாலையின் இரண்டு பக்கங்களிலும் நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருந்தனர்.

அப்போது திடீரென ஒரு நபர் தடுப்புச் சுவரை தாண்டி குதித்து சாலையில் இறங்கினார். இதையடுத்து அங்கிருந்த பொலிஸார் உடனடியாக அந்த நபரை தரையில் தள்ளி கட்டுப்படுத்தினர்.

தொடர்ந்து அந்த நபரை கைது செய்த பொலிஸார் அவரை, பொலிஸ் வாகனத்தை நோக்கி அழைத்துச் செல்வது போன்ற காட்சிகள் வீடியோவில் இடம்பெற்றுள்ளன. (அ)

# போலியோ தொற்று காரணமாக நியூயோர்க்கில் அவசர காலநிலை



*நியூயோர்க், செப். 13*

போலியோ நோய் நிலைமை காரணமாக நியூயோர்க்கில் அவசர காலநிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கழிவுநீர் மாதிரிகளில் போலியோ வைரஸ் கலந்திருந்ததால் அவசர காலநிலை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், போலியோவுக்கு எதிரான தடுப்பூசியை அதிகரிக்க அதிகாரிகள் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

போலியோ பரவலைக் கட்டுப்படுத்த அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்வது கட்டாயம் என நியூயோர்க் அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

எனினும், ஏற்கனவே தடுப்பூசி செலுத்திக் கொண்ட ஒருவர், போலியோ வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தாராயின், அவர் செயலூக்கி தடுப்பூசியை செலுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (அ)



ஆசியக் கிண்ணத்தை ஆறாவது தடவையாக வெற்றி கொண்ட மகிழ்ச்சியில் இலங்கை அணி.

## ஜாம்பவான்களின் கிரிக்கெட்:
# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இலங்கை!

கான்பூர், செப். 13

வீதி பாதுகாப்பை வலியுறுத்தி நடத்தப்படும் ஜாம்பவான்களின் இருபது -20 தொடரில் இலங்கை அவுஸ்திரேலிய அணியை 38 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை அணிக்கு ஜாம்பவான் தொடரின் முதல் போட்டியான இந்த மோதல் நேற்று முன்தினம் இந்தியாவின் கான்பூர் நகரில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை ஜாம்பவான் அணித் தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி போட்டியில் முதலில் துடுப்பாடிய இலங்கை ஜாம்பவான் அணி டில்சான் முனவீர மற்றும் திலகரட்ண டில்சான் ஆகியோரின் அபார ஆட்டங்களோடு 20 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 218 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை ஜாம்பவான் அணி துடுப்பாட்டத்தில் சதம் விளாசிய திலகரட்ண டில்சான் வெறும் 56 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் 14 பௌண்ட்ரிகள் அடங்கலாக 107 ஓட்டங்கள் எடுத்தார். மறுமுனையில் டில்சான் முனவீர 63 பந்துகளுக்கு 2 சிக்ஸர்கள் மற்றும் 10 பௌண்ட்ரிகள் உடன் 95 ஓட்டங்கள் பெற்றார்.

இதேநேரம் அவுஸ்திரேலிய பந்துவீச்சு சார்பில் பிரெட் லீ ஒரு விக்கெட்டை சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 219 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்து 180 ஓட்டங்களுடன் போட்டியில்



தோல்வியினைத் தழுவியது.

அவுஸ்திரேலிய ஜாம்பவான் அணி துடுப்பாட்டத்தில் அதிரடியாக துடுப்பாடி போராட்டம் காட்டிய நதன் ரீர்டோன் 19 பந்துகளுக்கு 3 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 46 ஓட்டங்கள் பெற்றார்.

மறுமுனையில் இலங்கை ஜாம்பவான் அணியின் பந்துவீச்சில் நுவன் குலசேகர 4 விக்கெட்களைச் சாய்க்க, சதுரங்க டி சில்வா மற்றும் ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீதம் சாய்த்து தமது தரப்பு வெற்றியை உறுதி செய்தனர்.

இந்தப் போட்டியின் வெற்றியோடு இலங்கை ஜாம்பவான் அணி, வீதிப் பாதுகாப்பு தொடரை வெற்றிகரமாக ஆரம்பித்திருக்கின்றது. போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை ஜாம்பவான் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் தெரிவு செய்யப்பட்டார்.

# இலங்கை சம்பியனாக தகுதியான அணியே!



டுபாய், செப். 13

15ஆவது ஆசிய கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியது. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது. அத்துடன் 6ஆவது முறையாக ஆசியக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது.

இந்த ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அணி எளிதாக வெற்றி பெறும் என்று நினைத்தபோது அடுத்தடுத்து விக்கெட் விழுந்ததால் ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இதையடுத்து, போட்டி முடிந்த பின்னர் பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் முகமது ரிஸ்வான் கூறுகையில், “நாங்கள் தவறு செய்தோம் ஆனால், நாங்களும் மனிதர்கள் தான். நாங்கள் இந்த தொடர் முழுவதும் மிகச்சிறப்பாக விளையாடினோம். இந்த ஆட்டத்தில் முதல் இனிஸ்ஸில் நாங்கள் உத்வேகத்தை இழந்துவிட்டோம்.

இருபது -20 கிரிக்கெட்டை பொறுத்தவரை முதல் இனிங்ஸின் முடிவில் எந்த அணிக்கு உத்வேகம் இருக்கிறதோ அந்த அணிக்கு சாதகமான அம்சமாகும். என்னை பொறுத்தவரை எந்த அணி நாணயச் சுழற்சி பற்றி நினைக்கிறதோ அந்த அணி ஒரு சம்பியன் அணி இல்லை. இலங்கை அணி இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி பற்றி கவலை கொள்ளவில்லை. நாங்கள் செய்த தவறுகளை பயன்படுத்தி அவர்கள் சிறப்பாக செயல்பட்டனர். இலங்கை அணி சம்பியன் ஆவதற்கு தகுதியானவர்கள் - என்றார். (ஐ)

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ஸ்பெயின் அல்கராஸ் சம்பியன்!



நியூயோர்க், செப். 13

நடப்பு அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார் 19 வயதான ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ். அவர் வெல்லும் முதல் கிராண்ட்ஸ்லம் பட்டம் இது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஆர்தர் ஆஷ் அரங்கத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் நோர்வே நாட்டின் காஸ்பர் ரூடுக்கு எதிராக விளையாடி இருந்தார். 6-4, 2-6, 7-6 (1), 6-3 என்ற செற் கணக்கில் இறுதிப் போட்டியை அவர் வென்றார். இதன் மூலம் சர்வதேச அளவில் ஆடவர் ரென்னிஸ் பிரிவில் முதலிடத்தை பிடித்துள்ளார்.

1973 முதல் இதுவரையிலான ஏ. ரி. பி. தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள மிக இளம் வயது வீரர் என்ற அந்தஸ்தை எட்டியுள்ளார் கார்லோஸ் அல்கராஸ். கடந்த 2020 முதல் நடால், ஜொகோவிச், மெத்வதேவ் மற்றும் அல்கராஸ் ஆகியோர் ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தில் இருந்துள்ளனர்.

ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றதும் ரென்னிஸ் களத்தில் விழுந்து தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தரையில் புரண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அதோடு எதிரில் இருந்து ரூடையும் கட்டி அணைத்து மகிழ்ந்தார் அவர்.

(ஐ)

# சம்பியன்ஸ் லீக் உதைபந்து சென். மேரிஸ் அணி வெற்றி!




கொழும்பு, செப். 13

யாழ்ப்பாணம் சென். மேரிஸ் அணி குருநாகல் மொறகஸ்முல்லை அணியை 5 -0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரின் நான்கு போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடந்தன.

இதில், யாழ்ப்பாணம் சென். மேரிஸ் அணியை எதிர்த்து மொறகஸ்முல்லை அணி விளையாடியது.

குருநாகல் மாலிகாபிட்டி விளையாட்டரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் பெற முடியாமல் போனது.

எனினும், போட்டியின் 61ஆவது நிமிடத்தின் பின்னர் கோல் வேட்டையை ஆரம்பித்த தேசிய அணியின் முன்னாள் வீரர் ஞானரூபன் வினோத், போட்டி நிறைவடைவதற்குள் நான்கு கோல்களையும், ஜேசுதாசன் அமிட்டன் ஒரு கோலையும் பெற, போட்டி நிறைவில் 5-0 என இலகு வெற்றியைப் பதிவு செய்தது சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம்.

இம்முறை முதல் முறையாக சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரில் கால் பதித்த யாழ்ப்பாணம் சென். மேரிஸ் வீரர்கள் இறுதிப் போட்டியில் பெற்ற வெற்றியுடன் தொடரை நிறைவு செய்துகொண்டது. இந்த அணி இம்முறை தொடரில் 5 வெற்றிகளையும், மொறகஸ்முல்லை வீரர்கள் தொடரில் 4 வெற்றிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய அபிவிருத்திக்கு இடையூறான சுற்றறிக்கைகளை மீளாய்வு செய்க!

## ஜனாதிபதி ரணில் பணிப்புரை



கொழும்பு, செப்.13

**இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்திய முதலீடுகள் தொடர்பான கலந்துரையாடலின்போது இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறான சுற்றறிக்கைகளை உடனடியாக மீளாய்வு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

இந்திய முதலீட்டு ஒத்துழைப்பின் அடிப்படையில் நாட்டில் மேற்கொள்ளப்படும் பல அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜாக்கோப் இதில் பங்குபற்றினார்.

இதன்போதே, இந்திய முதலீடுகளின் கீழ் இலங்கையில் பல திட்டங்களை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள தடைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சு செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

முன்னைய அரசாங்கங்களால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் உள்ள ஏற்பாடுகள் அபிவிருத்திக்கு இடையூறாக இருப்பின் அவற்றைத் திருத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கினார். (ஐ)

# தமிதா பிணையில் விடுதலை!



கொழும்பு, செப். 13

கோட்டா கோ கம போராட்டத்தில் பங்கேற்ற நடிகை தமித்தா அபேரத்னவை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

தமித்தா அபேரத்ன சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதவான் திலின கமகே, தலா 500,000 ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆர்ப்பாட்டத்தின் போது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்து, அவரை செப்டெம்பர் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இதழியல் கற்கைநெறியை மீள ஆரம்பிக்க கோரிக்கை



அம்பாறை, செப். 13

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் மற்றும் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு, துணைவேந்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கைநெறியை மீண்டும் ஆரம்பிக்குமாறு, சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

இக்கற்கை நெறியை மேற்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையை விரும்புபவர்கள் ஆர்வமாக இருப்பதாக தன்னிடம் தெரிவித்துள்ள நிலையிலேயே, இக்கோரிக்கையை முன்வைப்பதாக உபவேந்தரிடம் றியாத் ஏ.மஜீத் சுட்டிக்காட்டினார்.

இதனையெடுத்து, சிலோன் மீடியா போரத்தின் இக்கோரிக்கையை ஏற்று இன்னும் ஓரிரு வாரங்களில் இதழியல் கற்கை நெறிக்காக விண்ணப்பம் படிவங்கள் கோரப்படவுள்ளதாக உபவேந்தர் உறுதியளித்தார்.

அதேவேளை, பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூவக்கர் பதவியேற்று ஒரு வருடப் பூர்த்தியை நினைவு கூர்ந்து நினைவுப் பரிசொன்றை, சிலோன் மீடியா போரத்தின் சார்பில் றியாத் ஏ.மஜீத் வழங்கினார். (அ)

# 74 எம்.பிக்களில் 30 பேர் மட்டும் நட்டஈடு கேட்டு விண்ணப்பம்!

கொழும்பு, செப். 13

மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது எரிந்து நாசமான வீடுகளுக்கான முழுமையான நட்டஈடுகளை பெற்றுக் கொள்வதற்காக 30 பாராளுமன்ற உறுப்பினர்களே விண்ணப்பங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர் என ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறையின்போது 74 பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன அல்லது தாக்கப்பட்டன.

எவ்வாறாயினும் 44 பாராளுமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவில்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப் பாளர் அமைச்சர் பிரசன்னரண துங்க குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள அரசாங்கக் கட்சி அமைப்பு அலுவலகத்தில், வழக்கறிஞர்கள் சேத மதிப்பீடு அறிக்கைகளைத் தயாரிக்கின்றனர். வீடுகள் தீப்பிடித்து எரிந்த எம்.பிக்கள் தங்களது மதிப்பீட்டு அறிக்கைகளுடன் வெள்ளிக்கிழமைக்கு முன் (09ஆம் திகதி) விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என ஆளும் கட்சி எம்.பி.க்கள் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்த பின்னர், கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள ஹனி பூர்ணா அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அலுவலகம் நடத்திய ஆய்வின் பின்னர் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்த பின்னரே எம்.பிக்கள் முழு இழப்பீடு பெற முடியும். (அ)

# மனித பாவனைக்கு ஏற்ற அரிசியில் விலங்குகளுக்கு தீவனம் உற்பத்தி!

கொழும்பு, செப். 13

மனித பாவனைக்கு ஏற்ற அரிசியைப் பயன்படுத்தி அரசாங்க கால்நடை பண்ணை ஒன்று கால்நடைகளுக்கு தீவனம் உற்பத்தி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது குறித்த பண்ணைக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கால்நடை தீவன உற்பத்திக் காக சேமித்து வைக்கப்பட்டிருந்த பத்தாயி ரம் கிலோ அரிசியை நுகர்வோர் அதிகார சபையினர் கையகப்படுத்தியுள்ளனர்.

தம்புத்தேகம ஹூரிகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பு வைக்கப்பட்டுள்ளதாக அனுராதபுரம் நுகர்வோர் அதிகார சபைக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பன்றிகள் மற்றும் கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்பட்ட கொள்கலன்கள் மற்றும் நுகர்வுக்கு பயன்படுத்தக்கூடிய அரிசி இருப்புகளுக்கு சீல் வைக்க நுகர்வோர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# மீண்டும் அதிகரிக்கும் கோழி இறைச்சி விலை

கொழும்பு, செப். 13

மின் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் வரி அதிகரிப்பு காரணமாக கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலையை மீண்டும் உயர்த்தவேண்டிய நிலை ஏற்படும் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் தலையிட்டு சலுகைகளை வழங்கினால் விலையை குறைக்க முடியும் என சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மாதம் முதல் நீர் கட்டணம், மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது. கோழிப் பண்ணைத் தொழில் நீர் மற்றும் மின்சா ரத்தை அதிகம் பயன்படுத்துகிறது. இந்த அதிகரிப்புடன், வற் வரி 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரித்துள்ளது. புதிய பாதுகாப்பு வரி 2.5 வீதம் விதிக்கப் பட்டுள்ளது.

இது இறுதி உற்பத்திக்கு சுமார் 7.5 வீதம் அதிகரிக்கலாம். அனைத்து சூழ்நிலைகளிலும், உற்பத்திச் செலவைப் பொறுத்து கோழி இறைச்சியின் விலை உயரும் வாய்ப்புள்ளது. இது குறித்து அமைச்சரிடம் திங்கட்கிழமை விவாதிப்போம். குறிப்பாக முட்டையின் கட்டுப்பாட்டு விலையில் இருந்து விடுபடுவது எப்படி என கலந்துரையாடுவோம்.

தற்போது 50 வீத உற்பத்தியாளர்கள் முட்டையின் கட்டுப்பாட்டு விலையால் இத்தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர். முட்டையிடும் விலங்குகள் கூட இறைச்சிக்காக சந்தைப்படுத்தப்படுகின்றன-என்றார். (அ)

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல படகு வசதி செய்து கொடுத்த ஐவர் கைது!

மட்டக்களப்பு, செப். 13

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்கு படகு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த ஐவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விஷேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

காத்தான்குடி முத்துராான் கடற்கரையில் மேற்கொள்ளப்பட்ட நான்கு சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட ஐந்து டிங்கிப் படகுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள், அவுஸ்திரேலியாவுக்கு ஒருவரை சட்டவிரோதமான முறையில் ஏற்றிச் செல்வதற்காக 10 இலட்சம் முதல் 15 இலட்சம் ரூபா வரை பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

## சிங்கள - பௌத்த...

வர்கள் இலங்கை வந்த சமந்தா பவரை சந்தித்தனர். இதன்போதே மனோ கணேசன் எம். பி. மேற்கண்ட வாறு கூறினார்.

மேலும், “இலங்கை பன்மை கலாசார நாடக அதிகாரபூர்வமாக உருவாவதற்கு அமெரிக்கா துணை இருக்க வேண்டும். இதன் மூலம் இனப்பிரச்னை தீரும் வாய்ப்பு ஏற்படும். அது இலங்கை மக்களது நலனுக்கு மட்டுமல்ல, அமெரிக்கா, இந்தியா நலன்களுக்கும் வாய்ப்பானது.

இலங்கையில் எல்லா காலத்திலும் மிகவும் நிர்க்கதியான பிரிவினராக தோட்ட தொழிலாளர்களே வாழ்கின்றனர். வறுமை, போசாக்கு இன்மை, சுகாதாரம், கல்வி, சிறுவர் தொழிலாளர், பெண்கள் மீதான அதீத சுமை ஆகியவை தொடர்பான புள்ளி விபரங்கள் தோட்ட தொழிலாளர் மத்தியிலேயே அதிகமாக இருக்கின்றன. இன்றைய நெருக்கடி நிலைமை அவர்களை மேலும் துன்பத்தில் தள்ளியுள்ளது.

நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச நிர்வாக இயந்திரம் பாரபட்சமாக நடக்கின்றது. எமக்கு அதன் மீது நம்பிக்கையில்லை. அங்கே அரசியலும், இனவாதமும் இருக்கின்றன - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## 13ஆம் திருத்த...

யாற்றிய இந்திய பிரதிநிதி இலங்கை விடயம் குறித்து தமது கரிசனைகளை வெளியிட்டார்.

அதில், இனப் பிரச்னைக்கான அரசியல் தீர்வு குறித்து அளவிடக்கூடிய முன்னேற்றம் எதையும் இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தாதது கவலையளிக்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு தேவை. தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம், கண்ணியம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

கடனால் - பொருளாதார நெருக்கடியில் இலங்கை தற்போது சிக்கியுள்ளது. குடிமக்களின் ஆற்றலை கட்டியெழுப்புவதும் அவர்களுக்கான அதிகார அளிப்பை நோக்கி செயல்படுவதும் இலங்கையின் சிறந்த நலன்களாகும். இதற்கு அடித்தளமாக அதிகார பகிர்வு ஒரு முன்நிபந்தனையாகும்.

70 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மோசமான நிதி நெருக்கடியிலிருந்து மீள - மனிதாபிமான சவால்களை சமாளிக்க இலங்கை, மனித உரிமைகளை மேம்படுத்தவும் நிறுவனங்களை வலுப்படுத்தவும் வேண்டும் என்றும் இந்திய பிரதிநிதி கூறினார். (ஐ)

## மனித உரிமைகளில்...

உறுப்பு நாடுகள் தமது கருத்துகளை வெளியிட் டன. இதில், ரஷ்யா, சீனா நாடுகளின் பிரதிநிதி கள் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

“நல்லிணக்கத்தை உறுதிசெய்வதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண்பித்திருக்கிறது. நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின்போது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது”, என்று ரஷ்யா கூறியது.

இதேபான்று, “மனித உரிமைகள் நிலவரத்தை மேம்படுத்துவதிலும் பயங்கரவாத செயல்பாடுகளை எதிர்ப்பதிலும் இலங்கை முன்னேற்றகரமான வகையில் செயல்பட்டு வருகிறது. இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றை நாம் வலுவாக ஆதரிக்கிறோம். அதுமாத்திரமன்றி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம் அதற்கேற்றவாறு அமையவில்லை. இலங்கையின் தற்போதைய நிலவரத்தை எந்தவொரு தரப்பினரும் தமக்குச் சாதமான முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கு முயற்சிக்கக்கூடாது”, என்றும் சீனப் பிரதிநிதி தெரிவித்தார். (ஐ)

## தமிழ் தரப்பின்...

கூட்டத் தொடரை ஒட்டி ஜெனிவா சென்றுள்ள ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந் திரன் விடுத்த அறிக்கையிலேயே மேற் படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், இன்று (நேற்று) - 12 செப்ரெம்பர் 2022 ஆரம்பித்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அதன் ஆணையாளர் இலங்கைமீதான உத்தியோகபூர்வ வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில், கூட்டாக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து கடந்த செப்ரெம்பர் 2021இல் இருந்து முன்வைத்து வந்த அநேக விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன.

ஆணையாளரின் அறிக்கை மிக விவரமான உறுதியான அறிக்கையாக அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஒருமித்த நிலையில் தமிழ் தரப்பினர் அறிக்கை சமர்ப்பித்ததை ஐ. நா. கவனத்தில் கொண்டுள்ளதை நாங்கள் அவதானிக்க வேண்டும்.

இப்போது மனித உரிமைகள் பேரவையில் உள்ள அங்கத்துவ நாடுகள் சர்வதேச நீதிமன்றத்துக்குக் குற்றவாளிகளைப் பாரப்படுத்த வேண்டும் என்று அனைத்து தமிழ் தரப்பினரும் ஒருமித்த ஒன்றிணைந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இந்த கோரிக்கையை, மனித உரிமைகள் பேரவையில் உள்ள அங்கத்துவ நாடு கள் கொண்டுவர இருக்கும் பிரேரணை யில், உள்வாங்க வைக்கும் முயற்சிக்கு தமிழ் மக்கள் ஒருமித்த நிலையில் தொடர்ந் தும் செயல்படுவது வலுச்சேர்க்கும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## கைதிகளைப்...

ளில் பார்வையிட சென்ற சொந்தங்கள் மிக மோசமான முறையில் பரிசோதனை செய்யப்பட்டுள்ளார்கள். பெண்கள் மிகவும் வன்மையபான முறையில் சோதிக்கப்பட்டுள்ளார்கள்.

அசிங்கமான வார்த்தைகளை பிரயோகித்துள்ளார்கள். சிறைச்சாலையில் உள்ள தேவாதாசன் என்பவரை பார்க்கச் சென்ற அவரது மகளை மிக மோசமாக பரிசோதனை செய்த நிலையில் அந்த சகோதரி அதற்கு எதிர்ப்பை காட்டிய போது அவர்கள் சிங்களத்தில் இது எங்கள் சிங்கள நாடு எனக் கூறியுள்ளார்கள். மிகவும் இனவாதத்தோடு மோசமாக சிறை அதிகாரிகள் நடந்து கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் இந்த நாட்டில் தமிழ் மக்களுடைய தீர்வையும், அவர்களது உணர்வுகளையும், சரி செய்வது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஜனாதிபதி தனது உரையில் தமிழ் மக்களுடைய பிரச்னை தீர்க்கப்பட வேணட்டும் எனக் கூறுகின்றார். ஆனால், அதற்கு நேருக்கு மாறாக பல விடயங்கள் நடந்து வருகின்றது - என்றார். (ஐ)

## இலங்கை...

யின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவரகத்தின் தலைவர் சமந்தா பவர் தெரிவித்தார்.

அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சமந்தா பவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

இளைஞர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 6 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்க ளுக்கு ஆதரவு தெரிவித்தே அவர்களின் உறவினர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். (ஐ)

## மனித உரிமைகள் பேரவையின்...

மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் குழுவுக்கு தலைமை தாங்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்தார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது. இதில், மனித உரிமைகளின் முன்னாள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் அம்மையார் முன்வைத்த அறிக்கையின் சாரம்சத்தை வாய்மூல அறிக்கையாக பதில் மனித உரிமைகள் ஆணையாளர் நாடா அல்-நஷீஃப் முன்வைத்தார். இந்த அறிக்கைக்கு பதில் கூறும் முகமாக உரையாற்றிய இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியும் வெளி விவகார அமைச்சருமான அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன்,

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் அர்த்தமுள்ளவையாகவும் நிலைபேறானவையாகவும் அமையவேண்டுமானால், அவை சம்பந்தப்பட்ட நாட்டின் அனுமதியுடனும் அந்நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு அமைவாகவும் அடிப்படை சட்டக் கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவும் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம். எனவே, அரசமைப்புக்கு அமைவாக உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

எமது மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் நாம் கொண்டிருக்கும் நிலையான கடப் பாட்டையும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் தொடர்ந்து ஒத்துழைப் புடன் பணியாற்றுவதற்கான எமது தயார் நிலையையும் நான் மீளுறுதிப் படுத்துகின்றேன்.

இதேவேளை, இலங்கையானது பேரவையின் மேலும் சில உறுப்பு நாடுகளுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்திற்கு அதன் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது.

இந்தத் தீர்மானம், குறிப்பாக அதன் 6 ஆவது பந்தியில் உள்ள விடயங்கள் இலங்கை மக்களின் இறையாண்மையையும் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தையும் மீறும் வகையில் அமைந்திருப்பதாக நாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றோம். எனவே, இந்தத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் அதனுடன் தொடர்புடையதாக மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளையும் நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்” - என்றார். (ஐ)

## மனித உரிமைகள் மீறல்...

நேற்று ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரை ஆரம்பித்து உரையாற்றியபோது பதில் ஆணையாளர் நாடா அல் - நஷீப் வலியுறுத்தியுள்ளார்.

இதில், அத்துடன், பௌத்த தொல்பொருள் சின்னங்கள் தொடர்பில் ஆராய்வதாகக்கூறி மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கள், கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டோர், முன்னாள் போராளிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தொடர் கண்காணிப்புக்கள் மற்றும் அடக்குமுறைகள்,வட, கிழக்கு மாகாணங்களில் அதிக ரித்துவரும் இராணுவ மயமாக்கல் என்பன தொடர்ந்தும் தீவிர கரிசனைக்குரிய விடயங்களாகவே இருந்துவருகின்றன என்றும் கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து இலங்கை விவகாரம் குறித்து மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தின.

**நெதர்லாந்து :** பொறுப்புக்கூறலை நிலைநாட்டு வதில் இலங்கை அடைந்துள்ள தோல்வி மற்றும் சிவில் அரச செயல்பாடுகளில் அதிகரித்துள்ள இராணுவ மயமாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரச மைப்பு மறுசீரமைப்பு ஊடாகவோ அல் லது புதிய அரசாங்கத்தின் மூலமோ இன் னுமும் தீர்வு காணப்படவில்லை. இலங்கை பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்துவதும் ஊழலை இல்லாதொழிப்ப தும் அவசியம்.

**பின்லாந்து :** அண்மையில் மாணவ செயல் பாட்டாளர்களைக் கைது செய்வதற்குப் பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத் தப்பட்டமை தொடர்பில் தீவிர கரிச னையை வெளிப்படுத்தினார் பின்லாந்து நாட்டின் பிரதிநிதி. அத்துடன் இந்த விடயம் உடனடியாக கொண்டு வரப் பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**ஐரோப்பிய ஒன்றியம் :** இலங்கை தற்போது முகங்கொடுத் திருக்கும் சவால்களை ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளடங்கலாக மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படல் மற்றும் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படல் என்பவற்றின் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

**சுவிற்சர்லாந்து :** வட, கிழக்கு மக்கள் மிகநீண்ட கால மாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை வலியுறுத்தி வரு கின்ற போதிலும், இவ்விடயத்தில் மிகச்சொற்பளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது. அமைதிப் போராட் டக்காரர்கள்மீதான தாக்குதல்கள் குறித் தும் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

**பிரான்ஸ் :** ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசாங்கம் முழு மையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை வலுப்படுத்துவதுடன் சிவில் சமூக இடைவெளியை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதி வலியுறுத்தினார்.

**ஜப்பான் :** பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்வதற்கென முன்மொழியப் பட்ட திருத்தங்களை வரவேற்கிறோம். இருப்பினும் நாட்டில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை உறுதிசெய்வதற்கு மேலும் பல முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அத்தோடு நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கத்தயாராக இருப்பதாக ஜப்பான் உறுதியளித்தது.

**அமெரிக்கா :** சட்டத்தின் ஆட்சி, நீதியை நாடுவ தில் அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்பு, முக்கிய கட்டமைப்புகளின் சுயாதீனத்தன்மை என்பன ஜனநாயகக் கட்டமைப்பின் முக்கிய தூண்களாகும். எனவே, இலங்கையானது முதலாவது நடவடிக்கையாக நாட்டில் நீண்டகாலமாக நிலவும் ஊழலையும் தண்டனைகளிலிருந்து விலக்கீடுபெறும் போக்கையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

**பிரிட்டன் :** ஐ. நா. மனித உரிமைகள் பேரவை யின் 46/1 தீர்மானத்துக்கு அமைவாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதில் மிகச்சொற்பளவிலான முன்னேற்றங்களே அடையப்பட்டுள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு உறுதிய ளிக்கப்பட்டவாறு உள்ளக பொறுப்புக் கூறல் பொறிமுறை ஒன்று உருவாக்கப் படாத நிலையில் இலங்கை தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கை தொடரவேண்டும்.

**கனடா :** இலங்கை தற்போது முகங்கொடுத் திருக்கும் நெருக்கடிகள் நாட்டின் மனித உரிமைகள் நிலவரத்தை மேலும் மோச மடையச்செய்யும் என கனடா அதன் கரிசனையை வெளிப்படுத்தியது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச பொறிமுறை தேவை!

## உலக தமிழர் பேரவை வலியுறுத்து

கொழும்பு, செப். 13

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கும், பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்குவதற்கும் ஒரு சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தவுள்ளதாக உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறியமைக்கான விசாரணை, சாட்சியங்களை சேகரித்தல், பொறுப்புக்கூறல், நீதி வழங்குதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், உள்ளூர் பொறிமுறை என கூறி பாதிக்கப்பட்டவர்களை மற்றும் சர்வதேச சமூகத்தை அரசாங்கங்கள் முட்டாளாக்கியுள்ளன என்றும் உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்தார்.

எனவே புதிய தீர்மானம், நிலைமாறுகால நீதியின் ஒரு பகுதியாக, இதேபோன்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழாமல் இருக்கவேண்டும் மற்றும் உள்நாட்டு உள்நாட்டுப் போரில் விளைந்த பிரச்னைகளின் மூல காரணங்களுக்கான அரசியல் தீர்வைக் கோரவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பை அர்த்தப்படுத்த வேண்டும் என்றும் மாகாணங்களுக்கு அதிகபட்ச அதிகாரப் பகிர்வை அனுமதிக்கும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (அ)

# மரக்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 13

நாட்டில் கடந்த நாட்களாக நிலவிய சீரற்ற கால நிலையால் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

இதன்படி, ஒரு கிலோகிராம் போஞ்சி 600 ரூபாவுக்கும், கரட் ஒரு கிலோ 400 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கறிமிளகாய் 800 ரூபாவுக்கும் கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 400 ரூபா வரை அதிகரித்துள்ளது என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

வெள்ளரிக்காய், பீர்க்கங்காய் மற்றும் மரவள்ளிக் கிழங்கு என்பவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# போர்க்குற்றங்களை விசாரிக்க ஐ.நா தவறினால் பைடன் தலையிடவேண்டும்!

நியூயோர்க், செப். 13

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஊடக இலங்கை போர்க்குற்றங்களை விசாரிக்கத் தவறினால் இலங்கைக்கு எதிராக ஜனாதிபதி பைடன் ஒருதலைப்பட்ச நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்காவை தளமாகக் கொண்ட பைடனுக்கான தமிழர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் நேற்று தொடங்கிய கூட்டத்திற்கு முன்னதாக பைடனுக்கான தமிழர் அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1990 களின் பிற்பகுதியில் கொசோவோவை முன்மாதிரியாகக் கொண்டு, இலங்கை போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வழக்குத் தொடரத் தவறினால், இலங்கைக்கு எதிராக ஒருதலைப்பட்ச நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கை இனப் போர் 1983-2009 வரை நீடித்தது. இது ஒரு தேசியவாத மற்றும் மத மோதலாக இருந்தது, இது தீவில் பௌத்த சிங்களவர்களுக்கும் இந்து தமிழருக்கும் இடையே நடந்து கொண்டுள்ளது.

போரின்போது, 80,000 தமிழ்ப் பெண்கள் விதவைகளாகவும், 50,000 குழந்தைகள் அனாதைகளாகவும் ஆக்கப்பட்டதில் 145,000 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 25,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். 2009 ஆம் ஆண்டு முதல், இலங்கை அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட எண்ணற்ற மனித உரிமை மீறல்கள், நில அபகரிப்புகள் மற்றும் கலாசார அச்சுறுத்தல்கள்", அவை அனைத்தும் "தொடர்ச்சியான இனப்படுகொலை கொள்கை" என்று தமிழர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி பைடன் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தை ஸ்ரீலங்காவில் தலையிடுமாறு கேட்டுக் கொள்கிறோம். இது போர்க்குற்றவாளிகளை விசாரணை செய்வது மட்டுமல்ல, "தெற்காசியாவில் சமநிலை சக்தி மற்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பை" பாதுகாப்பது, சீனா அதிகரித்து வரும் பொருளாதார இருப்பைக் கொண்டுள்ளது. மற்றும் 2022 இலங்கையின் நிதி நெருக்கடியின்போது தீவில் சீனாவின் அரசியல் செல்வாக்கு. இவை யாவும் பிராந்தியத்தின் அமைதிக்கு பாதிப்பை உண்டாக்கும் எனவும் பைடனுக்கான தமிழர்கள் கடிதத்தில் கூறியுள்ளனர். (அ)

# 2023இல் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறாது

கொழும்பு, செப். 13

அடுத்த வருடத்தில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புக்கள் இல்லை என நிதி அமைச்சு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் பெருகிவரும் செலவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பே இந்த முடிவிற்கான காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின்படி, புதிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யக்கூடாது என்றும் அரச நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவுகள், நிதி அமைச்சின் செயலாளர் கே.எம். மகிந்த சிறிவர்தனவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உட்பட்டவர்கள், அரச ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதைத் தவிர்க்குமாறும் உள்ளூர் பயிற்சி மற்றும் முன்முயற்சிகளும் தேவைகளை கருதி கண்டிப்பாக கட்டுப்படுத்தப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# மன்னாரில் 'இணையம்' நிறுவனம் உடைக்கப்பட்டு ஆவணங்கள் களவு

மன்னார், செப். 12

மன்னார் மாவட்டத்தில் மனித உரிமைகள் சார்ந்து பணியாற்றி வரும் 'மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம்' நிறுவனத்தின் அலுவலகம் கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு முக்கிய ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக மனித உரிமைகள் சார்ந்து பணியாற்றி வரும் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தால் தற்போது தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு தொடர்பான 100 நாள் செயல் முனைவை மன்னார் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த மன்னார் சாவற்காட்டு பகுதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம் நிறுவனத்தின் அலுவலகம் கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு,குறித்த அலுவலகத்தில் காணப்பட்ட சில ஆவணங்கள் புகைப்படக் கருவி (கமெரா) மற்றும் பென்டிரைவ் போன்ற முக்கிய ஆவண சேமிப்புக்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக கடந்த சனிக்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும் குறித்த அலுவலக சி. சி. ரீ. வி. கமெரா காட்சிகள் ஆராய்ந்தபோது குறித்த இரண்டு நபர்கள் அலுவலகத்தில் இருந்த மேசை லாச்சிகளில் ஆவணங்களை தேடுவதும் கதவுகளை திறப்பதும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பெறுமதிமிக்க மடிக்கணனி, கணனிகள் மற்றும் பெறுமதிக்க பொருட்கள் இருந்தும் அவைகள் எதுவும் எடுத்துச் செல்லப்பட வில்லை. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2800 கோடி ரூபாவுக்கு மிளகாய் இறக்குமதி !



கொழும்பு, செப். 13

இவ்வருடம் ஜனவரி முதல் ஜூலை வரையிலான ஏழு மாத காலப் பகுதியில் 2800 கோடி ரூபா பெறுமதியான மிளகாய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தக் காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மிளகாயின் அளவு 18,556 மெற்றிக் தொன்களாகும்.

அடுத்த இரண்டு வருடங்களுக்குள் நாட்டின் தேவையில் 80 சதவீத மிளகாயை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் மிளகாய்த் தேவையில் 20 வீதத்தை வழங்க தயாராக உள்ளதாக அநுராதபுரம் மாவட்டத்தில் மிளகாய் பயிரிட்டுள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். விவசாய துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் அனுராதபுரம் யகல்ல, கடகல, தம்புத்தேகம உள்ளிட்ட பல பிரதேசங்களில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய் தோட்டங்களை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அவதானித்த போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

மேலும், ஒரு ஏக்கர் மிளகாய் பயிரிட்டு 6 மாத காலத்திற்குள் 74 இலட்சம் ரூபா வருமானம் ஈட்ட முடியும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

நாட்டில் மிகவும் வெற்றிகரமாக மிளகாய் பயிரிடும் திறன் காணப்பட்ட போதிலும், நாட்டின் தேவையில் 60 வீதத்திற்கும் அதிகமான மிளகாய் இன்னும் இறக்குமதி செய்யப்படுவதாக விவசாய அமைச்சர் தெரிவித்தார். (அ)

# மீண்டும் மின்வெட்டு; இன்றுமுதல் நடைமுறை!

கொழும்பு, செப். 13

இன்று செவ்வாய்க்கிழமை முதல் 16 ஆம் திகதி வரை 1 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜீ, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களில் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை ஒரு மணி நேரம் மின்வெட்டு சுழற்சி முறையில் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றைய தினம் எந்த முன்னறிவிப்பும் இன்றி ஒரு மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பொட்டு,ராட்சசி
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : டீடுயுஊமு யுனே றுஉஐவுநு

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு